# நரகம்

## 1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# நரகம்

~~~~~~~~~~~~~~~~~~~~

**(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, ‘நரகம்’ என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)**

~~~~~~~~~~~~~~~~~~~~

22. ஆகையால் நண்பனே, நீ ஒரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடாதபடி நிச்சயமுடையவனாயிரு. அது - அது ....... அது பலனளிக்காது. வெறுமனே ஒழுங்கற்ற விதமாய் அதனண்டைச் செல்லாதே. நிச்சயமுடையவனாயிரு, இரட்டிப்பான நிச்சயமுடையவனாயிரு, ஏனென்றால் உனக்கு மற்றொரு தருணம்

கிடைக்கிறதில்லை. நீ இங்கே பூமியின் மேல் இருக்கும்போது,. இதுவே உன்னுடைய தருணமாய் இருக்கிறது.

23. ஐசுவரியவானையும், லாசருவையும் நினைவில் கொள்ளுங்கள். அவனுக்கும் இவனுக்கும் இடையே எந்த மனிதனும் எப்போதும் கடந்திராத அல்லது எப்போதும் கடக்க முடியாதபடியான ஒரு பெரும் பிளவு இருந்தது. புரிகின்றதா? நீங்கள் மரிக்கும்பொழுது, அதுவே இதற்கு தீர்வாகிறது. அந்த இடங்களிலிருந்து அவர்கள் உங்களுக்கு ஜெபிக்கிறார்கள் என்று ஜனங்கள் உரிமை கோருவதை நான் அறிவேன். ஆனால் நீங்கள் அதை ஒருபோதும் நம்பவேண்டாம். அது தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாயிருக்கிறது. புரிகின்றதா? "மரமானது எப்பக்கமாக சாய்கிறதோ, சாய்கிறவிதமாகவே, அந்த விதமாகவே அது விழுகிறது”. இயேசுதாமே, “ஒரு பெரும் பிளவு இருந்தது என்றும், ஒரு

மனிதன் மரித்து, நரகத்திற்கு சென்றுவிடும்போது, அவன் (ஒருபோதும்) பரலோகத்திற்கு வரவே முடியாது. எந்த மனிதனுமே அதை எப்போதுமே கடந்ததில்லையென்றும், ஒருபோதும் அதை கடக்கவே முடியாது" என்றும் கூறினார், என்னைப் பொறுத்தமட்டில் அதுவே இதற்கு தீர்வாகிறது. இயேசு அது இவ்வாறு இருந்தது என்று கூறிவிட்டபோது அதைக் குறித்த யாவும் அவ்வளவுதான்.

24. ஆகையால் சற்று நினைவிருக்கட்டும். இப்பொழுது இது உங்களுடைய தருணமாயிருக்கிறது. இன்றிரவு இது உங்களுடைய கடைசி தருணமாயிருக்கலாம்.

**64-03-21E அடையாளத்தின் சத்தம்**

~ ~ ~ ~ ~

60. சாத்தானின் ராஜ்யம் மரணத்தை தவிர வேறொன்றையும் வாக்களிக்க

முடியாது. அவனிடம் உள்ளது அவ்வளவுதான். அவனே மரணத்துக்கு மூலகர்த்தா. அவன் பொய்க்கு தகப்பன், எனவே அவனால் பொய்களை வாக்களிக்க முடியும். அவனால் உங்களுக்கு ஜீவனைக் கொடுக்க முடியாது. அவனால் உங்களுக்கு பரலோகத்தை அளிக்க முடியாது. ஏனெனில் உங்களுக்கு அளிக்க அவனிடம் பரலோகம் கிடையாது.

61. இதை சிந்தித்துப் பாருங்கள்! ஒரே வார்த்தை. பிசாசு அல்லது அவனைச் சேர்ந்தவர்கள் அளிக்கும் வாக்குத்தத் தத்தின் காரணமாக தேவனை அவிசுவாசித்தல், அந்த ஒரு வார்த்தை உங்களை வேதனைக்கு , நரகத்துக்கு அனுப்புகிறது. அப்படித்தான் அது தொடங்கினது. இரக்கமுள்ள தேவன், ஆதியில் கைக்கொள்ளாத ஒரு வார்த்தையின் நிமித்தம் நரக வேதனையை பூமியில் அனுப்பி, பசியுற்ற

பிள்ளைகளும், எல்லா விதமான துன்பங்களும், பட்டினி கிடக்கும் ஜனங்களும் மரணமும் பூமியில் தோன்றச் செய்தாரே. அவர் அந்த பாவத்தை காணாதது போலிருந்து மக்கள் படும் வேதனையை தவிர்த்திருக்கக் கூடாதா? அன்று அவர் ஒரு வார்த்தையைக் கைக்கொள்ளாத பாவத்தை மன்னிக்க மறுத்து, இந்த விளைவுகளை பூமியில் தோன்றச் செய்திருக்க, எவ்வளவு அதிகமாக அவர் ஒரு வார்த்தையை மீறுவதனால் அவிசுவாசிக்கும் தனிப்பட்ட நபரை அங்கு நரகத்தில் தனியாக வேதனைப்படுத்துவார்? இதை யோசித்துப் பாருங்கள். இது பயங்கரமான காரியம்.

**62-02-11 ஒன்றாயிருத்தல்**

~ ~ ~ ~ ~

134 நீங்கள் ஒரு பாவியாயிருந்தால், உங்களுடைய கண்களை ஏறெடுத்து இப்பொழுதேப் பாருங்கள். நீங்கள்

அலட்சியமுள்ளவர்களாயிருந்து வந்திருந்தால், நீங்கள் சிறு சச்சரவுகளையும் மற்றும் சிறு காரியங்களையும் உடையவராயிருந்து வந்திருந்தால், அது என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது? நீங்கள் இந்நாட்களில் ஒன்றில் மரிக்கப் போகிறீர்கள். எந்த நாளில்? ஒருக்கால் இன்றைக்காயிருக்கலாமே! உங்களுக்குத் தெரியாது. இப்பொழுதிலிருந்து இன்னும் ஒரு மணி நேரத்தில் நீங்கள் நரகத்தில் இருக்கலாம், அல்லது நீங்கள் பரலோகத்தில் இருக்கலாம். ஆனால் நீங்கள் இப்பொழுதே தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய ஜீவியத்தில் சரியில்லாத காரியம் ஏதாவது இருக்குமாயின், நீங்கள் விசுவாசத்தினாலே இப்பொழுதே தெரிந்து கொள்ளுங்கள்.

135 நீங்கள், “பாருங்கள், என்னால் அவள் செய்ததை பொறுத்துக் கொள்ள முடியவில்லையே! என்னால் அவன்

செய்ததையும் கூட பொருத்துக் கொள்ள முடியவில்லையே!” என்று கூறலாம். அவர்கள் என்ன செய்திருந்தாலும் பொருட்படுத்தாமல் ஜீவனை தெரிந்து கொள்ளுங்கள். ஜீவனை தெரிந்து கொள்ளுங்கள்.

136 இயேசு, “நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து ஒவ்வொரு நபரின் தப்பிதங்களையும் அவர்களுக்கு மன்னிக்கவில்லையென்றால், அப்பொழுது உங்களுடைய பரலோகப் பிதா உங்களை மன்னிக்கமாட்டார்," என்றார். எனவே அதை கவனமாக புரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய இருதயத்தில் எந்த நபருக்கு எதிராக, பாவிக்கெதிராகவோ அல்லது ஒரு பரிசுத்தவானுக்கெதிராகவோ ஒரு குற்ற உணர்வு கொண்டிருந்தால், நீங்கள் நரக அக்கினியின் அபாயத்தில் இருக்கிறீர்கள்.

**58-07-20M விசுவாசத்தினாலே மோசே**

~ ~ ~ ~ ~

63. சார்லஸ் G. பின்னி என்ற ஒரு சுவிசேஷ பிரசங்கியார், மன மாற்றமடைந்த வழக்கறிஞர், மெலிந்து போன சிறு உருவங்கொண்ட தோற்றமாய்க் காணப்பட்ட நபர் ஒரு கட்டிடத்தில் ஒலியின் ஓசையை சோதித்து சரிபார்த்துக் கொண்டிருந்ததை சற்று எண்ணிப்பாருங்கள். அப்பொழுது அவர், “மனந்திரும்பு இல்லையேல் அழிந்து போ” என்று கூறிப்பார்த்தார். அப்பொழுது மாடியில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு மனிதன் மயங்கி விழுந்தான். அவர் நியூ இங்கிலாந்தில் ஒரு கட்டிடத்தின் உப்பரிக்கையில் நின்று, இழக்கப்பட்டவர்களுக்கு நரகத்தைக் குறித்துப் பிரசங்கித்தார். அப்பொழுது அவர், "நீங்கள் மனந்திரும்பவில்லையென்றால், அழிந்துபோவீர்கள்” என்று கூச்சலிட்டபோது, புருஷரும், ஸ்திரீகளும் வீதிகளில் மயக்கமுற்று விழுந்தனர்.

64. ஆனால் இன்றைக்கோ நீங்கள் மனந்திரும்புதலையும், நரக அக்கினியையும், கந்தகத்தையும் குறித்துப் பிரசங்கித்தால், ஜனங்கள் அதைப் பார்த்து நகைப்பார்கள். காரியம் என்ன? நம்முடைய இருதயங்கள் குளிர்ந்துபோயிருக்கின்றன. நாம் கவலையற்றவர்களாயிருக்கிறோம். நாம் ஏராளமான வற்றை உடையவர்களாயிருக்கிறோம். நமக்கு உலகத்தைக் குறித்து மிகக் குறைவானதும், தேவனைக் குறித்து மிக அதிகமானதுமே தேவையாயிருக்கிறது. நம்முடைய இருதயங்கள் மிகவும் குளிர்ந்து போயிருக்கிறது. நாம் ஏதோ ஓர் உணர்ச்சிவசப்படுதலில் ஆர்வமாகிவிட்டோம். நாமோ, "நம்மால் நடனமாட முடிந்தால்; நம்மால் சத்தமிட முடிந்தால்" என்பதில் ஆர்வமடைந்துவிட்டேம். நான் அதில் நம்பிக்கைக் கொண்டுள்ளேன். "நம்மால்

அந்நிய பாஷைகளினால் பேச முடிந்தால் நலமாயிருக்குமே". நான் அதில் விசுவாசங்கொண்டிருக்கிறேன். நான் அந்த ஒவ்வொன்றிலும் நம்பிக்கைக் கொண்டுள்ளேன். ஆனால் நாம் அதை உடையவர்களாயிருந்து அந்த மனவேதனையையும், அழுகையையும், நொறுங்குண்ட ஆவியையும் உடையவர்களாயில்லையென்றால், தேவன் அதை ஒருபோதும் உபயோகப்படுத்தவே முடியாது. அந்தக் காரியங்கள் நன்றாயிருக்கின்றன, ஆனால் அதனோடு செல்ல வேண்டிய மற்றொன்றையும் பெற்றிருக்க வேண்டும். நாம் முக்கியமான காரியத்தை விட்டு விட்டு, இரண்டாந்தரமானவற்றிற்காகச் சென்றுவிட்டோம்; நீங்கள் ஒருபோதும் ஒரு சிறியதன் பேரில் மிகப்பெரியதைப் பெற்றுக் கொள்ள முடியாது. நாம் அதை அறிந்திருக்கிறோம்.

~ ~ ~ ~ ~

91. ஒரு நாள் ஒரு சிறு பெண் வீதியினூடாக வந்து கொண்டிருந்தாள், முடிவிலே அவள், "ஓ, அல்லேலூயா, அல்லேலூயா" அவள் அப்பொழுதுதான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டாள்.

92. அங்கே எங்கேயோ ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த ஒரு நாத்திகன் "நீ என்னத்தைக் குறித்து அவ்வளவு சந்தோசமாக இருக்கிறாய் வாலிபப் பெண்ணே " என்றான். அவள், "ஓ, இயேசுவானவர் இப்பொழுதுதான் என்னை இரட்சித்து பரிசுத்த ஆவியினால் நிறைத்தார், நான் அவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறேன்" என்றாள்.

93. அவன், “இங்கே பார் உன்னுடைய கரத்திலிருக்கிறது என்ன" என்றான், அவள், "என்னுடைய வேதாகமம்” என்றாள். "நீ அதை விசுவாசிக்கிறாயா" என்றான். அவள், "நிச்சயமாக" என்றாள். அவன்,

"அது எல்லாவற்றையும் நீ விசுவாசிக்கிறாயா" என்றான்?

94. "அது எல்லாவற்றையும்” என்றாள். "யோனாவின் அந்தக் கதையை நீ விசுவாசிக்கிறாயா" என்றான். அவள் "ஆம்" என்றாள்.

95. அவன், "உண்மையாகவே ஒரு திமிங்கலம் அவனை விழுங்கி விட்டது என்பதை நீ விசுவாசிக்கிறாயா” என்றான். அவள், "ஆம் ஐயா நான் அதை விசுவாசிக்கிறேன்" என்றாள்.

96. "விசுவாசத்தைத் தவிர்த்து வேறு எந்தவிதத்திலாவது உன்னால் அதை நிரூபிக்க முடியுமா?” என்றான்.

97. "நல்லது, நான் பரலோகத்திற்குப் போகும் போது நான் சகோதரன் யோனாவை அந்தக் கேள்வியை கேட்பேன்” என்றாள்.

98. அந்த நாத்திகன் அவளிடத்தில், "சகோதரன் யோனா பரலோகத்தில்

இல்லாமல் போனால் என்ன செய்வாய்” என்றான். அதற்கு, "அப்படியானால் நீர்தான் அவரைக் கேட்க வேண்டும்" என்றாள். அல்லேலூயா! அவனுக்கு ஒரு இடம்தான் விடப்பட்டிருக்கிறது, அது நரகம்.

99. தேவனுடைய பாதையைப் புறக்கணித்தால் நீங்கள் நரகத்திற்குப் போய்த் தான் ஆகவேண்டும். நீங்கள் போகத்தான் வேண்டும். அதுதான் ஒரேயொரு இன்னொரு வழி. எனவே நீங்கள் ஒரு வழியிலோ அல்லது அடுத்த வழியிலோ இருக்கிறீர்கள் ஆமென் எல்லாம் சரியே.

**52-09-00 நமக்காக உண்டாக்கப்பட்ட தேவனுடைய பாதை**

~~~~~

40. ஒவ்வொரு அறையிலும் உஷ்ணத்திலிருந்து குளுமையாக்க தேவையான மின்சாரம் உள்ளது. ஒரு
~~~~~

அறையை வெடிக்கச் செய்யும் அளவிற்கு அது போதுமான மின்சாரத்தை உண்டாக்கும். ஒரு சிறிய குழிபந்தாட்ட பந்திலே (golf ball) தேவையான அளவு அணுக்களை நிறைத்து நியூயார்க் பட்டணத்தை வெடிக்கச் செய்து பூமியின் முகப்பிற்கு வெளியே தள்ளிவிடலாம். ஆகவே மனிதன் நரகத்தில் உட்கார்ந்து கொண்டு தன் மார்பில் தட்டிக் கொண்டு 'நரகம் என்கிற இடம் இல்லவே இல்லை'' என்று கூறி தேவனுடைய வார்த்தையை எதிர்த்துக் கொண்டு இருக்கிறான். (அதைக் குறித்த சிறிது என்னிடம் உள்ளது, அதை நாம் பார்க்கப் போகிறோம்). ஒவ்வொரு நாளும் அது அடங்கிய (நரகம் - தமிழாக்கியோன்) பெரிய பானையில் நீங்கள் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் இங்கே இருக்கையில், நீங்கள் சரியாக அதன் மேலேயே உட்கார்ந்துக் கொண்டிருக்கிறீர்கள், உனக்குக் அடியிலேயே நரகம் உள்ளது.

## 53-07-29 கேள்விகளும் பதில்களும் COD #1

~~~~~

182. சர்வ வல்லமையுள்ள தேவன் -- அவர் சரியாக அன்பின் தேவன் ஆவார். அது உண்மை . அவர் அப்படித்தான் இருக்கவேண்டும். அவர் தமக்கு சொந்தமானதை நேசிக்கிறார். அவர் தமது வார்த்தைக்கு உத்தமமானவராக இருக்க வேண்டும். ஆதாலால் ஒரு - ஒரு சர்ச்சைக்கல்ல, ஆனால் உங்களுடன் இணங்காமல் போக வேண்டும் என்பதற்காகவே. உங்களுடைய அன்பின் தேவன். . .

183. சிறிது காலத்திற்கு முன்னர் இங்கே நான் பேசிக் கொண்டிருந்தேன். . .அது ஒருக்கால் ஒரு யெகோவா சாட்சியாக இருக்கலாம். அந்த மனிதன் வந்து ''சகோதரன் பிரன்ஹாம், எரிகின்ற நரகம் ஒன்றிருக்கிறது என்பதை நீர்
~~~~~

விசுவாசிக்கின்றீர் என்பதை எனக்கு கூற முற்படுகிறீரா?" என்றார்.

நான், ""அது தான் கூறுவதல்ல, வேதாகமம் அதைக் கூறுகிறது'' என்றேன்.

அவர், "அப்படியானால் ஒரு நேசமிக்க பரலோகப் பிதா தம்முடைய பிள்ளைகளை எரித்துவிடுவார் என்று என்னிடம் கூற முற்படுகிறீரா? ஏன்" என்றார் ''உங்களுடைய குழந்தையை நீர் எரிக்கமாட்டீர்'' என்றார்.

நான் "இல்லை ஐயா!" என்றேன்.

''நல்லது அப்படியானால் மானிடராகிய நீர் அவ்வளவாக அன்பைக் கொண்டிருக்கிறீர் என்றால் (பாருங்கள் ஜனங்கள் எப்படி காரியத்தை மாற்றுகின்றனர்?) - மானிடப்பிறவியாகிய நீங்கள் அவ்வளவு அன்பு வைத்திருக்கிறீர் என்றால், ஒரு நேசமிக்க பரலோகப் பிதா தம்முடைய பிள்ளைகளை அழிப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

184. நான், "முடியாது!'' என்றேன். அவர் தம்முடைய பிள்ளைகளை அழிக்கமாட்டார், ஆனால் நீங்கள் யாருடைய பிள்ளை? தேவன் தம்முடைய பிள்ளைகளை அழிப்பதில்லை. அவர்களை உள்ளே கொண்டு வர தம்மால் இயன்றதை அவர் செய்து கொண்டிருக் கிறார். ஆனால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற பிசாசுதான் தன்பிள்ளைகளை அழித்துப் போடுவான். ஆதலால் தேவன் சாத்தானை அனுமதிக்கின்றார்.

**54-01-03E கேள்விகளும் பதில்களும் COD #3**

~~~~~

40.தேவன் மரண நியாயத்தீர்ப்பு எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டார் என்பதைக் கவனியுங்கள். நான் மரிக்க வேண்டிய மரணம், நான் போக வேண்டிய நரகம், மரணம் மற்றும் வியாதியாகிய அவருடைய நியாயத்தீர்ப்புகளோடு,
~~~~~

கிறிஸ்து அவரை இடைவெளியில் (gap) சந்தித்து, வானங்களுக்கும் பூமிக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருந்தார். தேவன் நம் எல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் சுமத்தினார்.

அங்கே தான் நியாயத்தீர்ப்பு அடிக்கப்பட்டது. இன்றிரவு சிலுவையாகிய அந்த அதிகாரச் சின்னம், உலகத்தை மூடிக் கொண்டிருக்கும் மூடி, ஆனால் தங்களுக்கு முன்பாக சிலுவைப் போய்க் கொண்டிருக்க அணிவகுத்துச் சென்று கொண்டிருக்கிறவர்களுக்கோ, நியாயத் தீர்ப்புகள் செலுத்தப்பட்டாயிற்று.

நோக்கிப்பார்த்து பிழைத்துக்கொள், என் சகோதரனே, பிழைத்துக்கொள்.

இயேசுவை நோக்கிப் பார்த்து, இப்பொழுதே பிழைத்துக்கொள்.

அது அவருடைய வார்த்தையில் பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது, அல்லேலூயா, ஒரே காரியம் தான், நாம்

நோக்கிப் பார்த்து, பிழைத்துக்கொள்வோம்.

## 55-01-22 மகத்தான ஊழியக்காரனாகிய மோசே

~~~~~

42. அவர் மரணம், நரகம், பாதாளம் இவைகளின் மேல் வெற்றி சிறந்தவராய் கல்லறையிலிருந்து எழும்பி வந்தார். இதோ நான் உங்களுடனே கூட எப்பொழுதும், உலகத்தின் முடிவு பரியந்தம் இருக்கிறேன் என்று கூறினார்.

## 55-04-10Sஎன் மீட்பர் உயிரோடிருக்கிறார்

~~~~~

412 ஆம், கவனியுங்கள். இப்பொழுது, என்னுடைய யேகோவா சாட்சிகள் உபதேசத்தை சார்ந்த நண்பனே, நான் அதைக் குறித்து உங்களைக் கேள்விகேட்க விரும்புகிறேன். புரிகிறதா? நரகம், பாதாளம், மாண்டாரின் கீழ் உலகு என்ற ஒரு இடம் இருக்குமாயின், நீங்கள் அதை

என்னவென்று அழைக்க விரும்பினாலும் சரி; அது கல்லறையிலேயே நிறுத்திவிடுமானால், அப்பொழுது அவர், “என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்” என்று ஏன் கூறினார்? அதைக் குறித்து என்ன? புரிகிறதா?

413 இங்கே அவருடைய சரீரம் கல்லறையில் இருந்தது; அவருடைய ஆத்துமா பாதாளத்தில் இருந்தது, உயிரோடு பிரசங்கித்துக் கொண்டிருந்தார்! அதைக் குறித்து என்ன? அவர் மீண்டும் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தார். அவருடைய ஆத்துமா ஆவிக்குரிய சரீரத்திலிருந்த ஜனங்களோடு கூட அங்கே இருந்தது. அவர் அவர்களுக்கு சாட்சி பகர்ந்து கொண்டிருந்தார், அவர்கள் "நீடிய பொறுமையோடே தேவன் காத்திருந்தபோது, மனந்திரும்பாமற்போனவர்கள்.”

## 57-10-02 எபிரெயர் நிருபத்தின் பேரிலான COD #6

~~~~~

245. நாம் தவறு செய்திருந்தால் நாம் நம்முடைய ஆத்துமாக்களை பரிசுத்த ஆவியால் சுத்திகரிக்க வேண்டுமென்று வேதம் நமக்கு போதிக்கிறது. நீங்கள் முழங்கால்படியிடுங்கள்; நாம் தவறு செய்கிறோம் என்பதை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப் படுத்தும்படிக்கு; நீ மரித்துப்போகும் படியான அளவிற்கு, நம்முடைய ஆத்துமாக்களை சுத்திகரிக்கும்படியாக அவருக்கு முன்பாக அப்படியே தரித்திருங்கள். இதுதான் நாம் கடைபிடிக்கும் முறை. ஆனால் கத்தோலிக்கர்களோ அதை அகற்றி, அதற்கு பதிலாக பாவ விமோசன ஸ்தலம் (Purgatory) என்னும் ஒன்றை அளித்துள்ளனர். ஒருவன் மரித்தால், அந்த ஸ்தலத்திற்கு செல்கின்றான் என்றும், சபை
~~~~~

குரு அதிக பணத்தை வசூலித்து, ஜெபம் செய்து, அவனை அங்கிருந்து வெளியே கொணர்கிறார் என்றும் கூறப்படுகிறது.

246. அது அர்த்தமற்ற நம்பிக்கை! "பட்டைப்புழு அதைத்தான் செய்தது. நிச்சயமாக! - ஜெபம் செய்து, பாவ விமோசன ஸ்த லத்திலிருந்து உங்களை மீட்டுக்கொள்ளுதல் என்பது. அந்த ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டுமானால் நூற்றுக்கணக்கான டாலர்கள் செலவாகும். பாவவிமோசன ஸ்தலத்தைக் குறித்து வேதத்தில் கூறப்பட்டுள்ளதா என்று காண்பியுங்கள்! அப்படியொன்றும் வேதத்தில் கிடையாது. இல்லை, ஐயா! நீங்கள் மரித்த பின்பு பாவ விமோசன ஸ்தலத்தை அடைவதாக அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்டனர். "பரி. போனிஃபேஸ் (St. Boniface) அப்படி கூறியுள்ளார்" என்று நீங்கள் கூறலாம்.

அவர் என்ன கூறியிருந் தாலும் அதைக் குறித்து எனக்கு கவலையில்லை.

## 62-04-22 மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல்

~ ~ ~ ~ ~

23. சில நாட்களுக்கு முன்பாக ஒருவர் பாவ விமோசன ஸ்தானத்தைக் (Purgatory) "குறித்து இவ்விதமாக கூறினார். பரி. பிரான்சிஸ்சும் (St. Francis) பரி. சிசிலியாவும் (St. Cecilia) இந்த உத்தரிக்கும் ஸ்தலத்தினின்று மக்களை வெளியே கொண்டு வரும்படி ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் மேலும் அந்தப் பரிசுத்தவான்களே அதற்கு அதிகார பூர்வமான உதாரணம் என்றும் கூறினார். இந்த உதாரணங்கள் வேத வார்த்தையிலில்லாத அதிகாரமாகும். அப்போஸ்தலர்கள் தேவ வார்த்தையின் அதிகாரமுடைவர்களாயிருந்தார்கள். அப்படி அது அவர்களுக்கு

முரணாயிருக்குமானால் அது ஒரு பொய்யே தவிர வேறொன்றுமில்லை.

பாவ விமோசன ஸ்தானம் (Purgatory) என்பதை நான் விசுவாசிக்கிறேன். ஆனால் அது இப்பொழுது நாம் வசிக்கும் உலகத்திலே இருக்கிறதென்பதை விசுவாசிக்கிறேன். பாவ விமோசன ஸ்தானம் என்றால் ''சுத்தமாக்குதல்'' (to purge) என்று பொருள் சுத்தமாவது உனனிவேதான் உள்ளது நீ ஏதாவது பாவம் செய்வாயாகில் அதற்காக மனந்திரும்பி, அறிக்கையிட்டு அழுது, உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் உன் இருதயத்தை சுத்தமாக்கு , மாறாக நீ சாகும் வரை தூத்திருந்து, உனக்காக சில குருக்கள் உன்னை நியாயந்தீர்த்து உன்னை சுத்த மாக்குவார்கள் என்று எண்ணாதே. உன் ஆத்துமாவின் சுத்த மாக்குதல் உன்னிடமதான் உள்ளது.

## 62-05-13 ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை

------------

122 அவளுக்கு பொன் நிறமுள்ள தலைமயிர் இருந்தது - மிகவும் அழகான பெண். கத்தரிக்கப்பட்டிருந்த அவளுடைய தலைமயிர் கலைந்து புதரைப் போல் காணப்பட்டது. அவளுடைய பெரிய பழுப்பு நிறகண்கள் வெளியே தள்ளப்பட்டு பாதி மூடியிருந்தன. அவளுடைய முகத்தில் காணப்பட்ட சுருக்கங்கள், அவள் அதிகமான வேதனைபட்டதன் காரணமாக, அவளுடைய முகம் முழுவதிலும் சிறு வீக்கங்கள் போல் எழுந்து நின்றன. அவளுடைய வாய் திறந்திருந்தது. நான் அவளிடம் நடந்து சென்று அவளை உற்று நோக்கினேன். அவளுடைய கணவன் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர், ''பில்லி, நான் ஒரு கத்தோலிக்கன், அவள்

பாவ விமோசன ஸ்தலத்துக்கு (purgatory) சென்றிருப்பதால், அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்'' என்றார்.

நான் “என்ன?” என்றேன்.

''அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள். அவள் பாவ விமோசன ஸ்தலத்தை அடைந்திருக்கிறாள். இரண்டு மணி நேரத்துக்கு முன்பு அவள் உம்முடைய சபையை கடந்து செல்லும் போது, நீர் கொண்டுள்ள அவ்விதமான மார்க்கத்தை எங்கள் பசு கொண்டிருந்தால், அதை அவள் கொன்று போடுவாள் என்று கூறினாள். அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்'' என்றார்.

நான், “இப்பொழுது காலதாமதமாகி விட்டது. அவள் வேறொரு இடத்துக்குப் போகும்வரை காத்திருக்காமல், இங்கேயே தன் ஆத்துமாவை கழுவி சுத்திகரித்திருக்க (purge) வேண்டும்'' என்றேன். பாருங்கள்? அது உண்மை. ஓ, ஆமாம். நமது துன்ப

நேரத்திலேயே அவரை நாம் தேடுகிறோம். ஜனங்கள், ''தேவன் பேரில் எனக்கு விசுவாசமில்லை'' என்று கூறக் கேட்டிருக்கிறேன். ஒருமுறை அவர்களுக்கு துன்பம் உண்டாகட்டும், அவர்கள் முதலாவது கூப்பிடுவது அவரையே.

## 62-06-01 இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல்

---------------

1. இன்றைக்கு நாங்கள் இந்த மிக பயபக்தியான, புனிதமான காலை வேளையில் இங்கு கூடி வந்திருக்கையில், எப்படியாய் எங்களுடைய இருதயங்கள் உள்ளுணர்வு கொள்ளுகின்றன வென்பதைக் குறித்து மானிட மொழிகளில் நாங்கள் வெளிப்படையாய்க் கூற முடிந்த எந்த காரியத்திற்கும் அது அப்பாற்பட்டதாயிருக்கிறது. எங்களுடைய மார்க்கமானது உண்மைப் பொருளாயாக்கப்பட்ட அந்த நேரத்தை

இந்தக் காலை சுட்டிக் காட்டுகிறது, ஏனென்றால் அது முழு மானிட வர்க்கத்தையும் மீட்கும்படியாய் வந்த உம்முடைய விலையேறப் பெற்ற பிள்ளை மறுபடியும் எழும்பினதாய் இருக்கிறது. கர்த்தாவே, நாங்கள் இந்த காலை அந்த மகத்தான கொண்டாட்டத்தின் வெற்றிவாகை விழாவில் இங்கிருக்கிறோம், அது எங்களுடைய மரணம், நரகம், பாதாளம் ஆகியவற்றில் ஜெயங்கொண்டவர்களாக ஆக்கினது. இத்தனை ஆண்டுகள் கடந்த பிறகும், நாங்கள் இன்னமும் இந்த உயிர்த்தெழுந்த காலையில் அவரை ஆராதிக்கும் படி அதிகாலையில் கூடி வந்திருக்கிறபடியால், நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம், ஏனென்றால் அவர் மீண்டும் வருவார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

## 59-03-29S ஜீவிக்கும் போது, மரிக்கும் போது, அடக்கம் பண்ணப்பட்ட போது, உயிர்த்தெழுந்த போது, வரும் போது

-----------

52. புறக்கணிக்கப்பட்டிருந்த புறஜாதிகளினின்று வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஒரு சந்ததியை தெரிந்தெடுக்கவும், அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அளித்து, அவர்களை வாக்குத்தத்தத்துக்குள் கொண்டு வரவும் கருதி, அவர் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியை அனுப்பினார். எல்லா வியாதிகளையும் ஜெயிக்க நமக்கு இப்போது உரிமையுண்டு. நாம் அதை ஜெயிக்க வேண்டிய அவசியமில்லை. அது ஏற்கெனவே ஜெயிக்கப் பட்டுள்ளது. நாம் அந்த வாக்குத்தத்தத்தின் மேல் உரிமை கொண்டாடி அதை கைப்பற்ற வேண்டும்.

மரணம் மேற்கொள்ளப்பட்டு விட்டது.நரகம் மேற்கொள்ளப்பட்டு விட்டது. வியாதி மேற்கொள்ளப்பட்டு விட்டது. சோதனை மேற்கொள்ளப்பட்டு

விட்டது. நாம் அவைகளின் வாசலில் நின்றுகொண்டு, அதை சுதந்தரித்துக் கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம். துப்பாக்கியால் சுட்டு ஜெயிக்க வேண்டும் என்ற அவசியமில்லை . அதற்காக ஏற்கனவே கிரயம் செலுத்தப்பட்டு விட்டது.

## 59-11-08 பகைஞனுடைய வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுதல்

---------

68. சகோதரனே, சகோதரியே, அந்த நிலைக்கு வந்துவிடுங்கள். இங்குள்ள அறிவு நிறைந்த வேதாகமக் கல்லூரிகள் உங்களிடம், "ஓ, அது பழங்காலத்து மனிதனின் கருத்து" என்று கூற அனுமதியாதேயுங்கள். இது பழங்காலத்து மனிதனின் கருத்தானால், தேவனும் பழங்காலத்தவரே. தேவன் பழங்காலத்தவரானால், நானும் கூட பழங்காலத்தவனே. ஆமென்! அவரைப்

போல் நான் இருக்க விரும்புகிறேன். ஏன்? அவருடைய ஆவி எனக்குள் இருந்துகொண்டு, பசிதாகமுற்று, தேவனுடைய வார்த்தைக்கு முரணாயிருக்கும் அனைத்தையும்...

ஜனங்கள், “ஒரு மனிதன் பொழுதுபோக்குக்காக சிறிது சீட்டு விளையாடி, ஓரிரண்டு காசு வைத்து சூதாடினால் பரவாயில்லை” என்கின்றனர். ஆனால் தேவனோ அது தவறு என்கிறார்.

“ஓ, நீங்கள் நல்ல ஒரு சமுதாய மது அருந்தி, எப்பொழுதுதாவது ஒரு முறை குடிப்பதனால்...'' ஆனால் தேவனோ, ”அவனுக்கு ஐயோ!'' என்கிறார்.

ஓ, நீங்கள், ''சகோ. பிரான்ஹாமே, மற்ற பெண்கள் செய்வது போல், நானும் என் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்கிறேன்'' என்கிறீர்கள். மற்ற பெண்கள் என்ன செய்கிறார்கள் என்று எனக்குக் கவலையில்லை. அவர்கள்

உங்களுக்கு உதாரணம் அல்ல, அவர்கள் உங்கள் முதலாளி அல்ல. உங்களுக்குள் பரிசுத்த ஆவி இருக்குமானால், ஜனங்கள் உங்களைக் குறித்து என்ன கூறினபோதிலும், அவருடைய புத்திமதிகளையே நீங்கள் பின்பற்றுவீர்கள்.

“நல்லது, சகோ. பிரான்ஹாமே, வெகு உஷ்ணமாயுள்ளது. எனவே நான் இந்த சிறு இன்னின்ன உடைகளை உடுக்க வேண்டியதாயுள்ளது''. அருமை சகோதரியே, நரகம் இதைக் காட்டிலும் அதிக உஷ்ணமாயிருக்கும் என்று உன்னிடம் கூற விரும்புகிறேன். வேண்டாம். அதை நினைவில் கொள்.

## 59-12-17 பரிசுத்த ஆவி எதற்காக அருளப்பட்டது?

----------

182. நீங்கள், "ஓ, சகோதரன் பிரன்ஹாமே, ஒரு நிமிடம் பொறுங்கள்.'' என்று கூறலாம். ஒரு நிமிடம்! அந்திக்

கிறிஸ்துவின் ஆவி அதைத்தான் செய்யும். அவைகளின் இரண்டு தலைகளை கவனித்தீர்களா? யார் அந்த யூதாஸ்காரி யோத்து? பிசாசு! அவன் கேட்டின் மகன் என்று வேதம் கூறுகின்றது. கேடு என்றால் என்ன? நரகம். அவன் நரகத்தின் குமாரன், நரகத்தி லிருந்து வந்தான், நரகத்திற்குச் சென்றான். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருந்தார், பரலோகத் திலிருந்து வந்தார், பரலோகத்திற்கு திரும்பிச் சென்றார். அவர்களிருவரும் சிலுவைகளில் மரித்த போது... யூதாஸ் ... யூதாஸ் சிலுவையில் மரித்தான் என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களில் எத்தனைப் பேர் அதை அறிவீர்கள்? அவன் ஒரு மரத்தின் மீது செத்தான். இயேசுவும்கூட ஒரு மரத்தின் மீது மரித்தார். அது வெட்டி எடுக்கப்பட்ட ஒன்றாயிருந்தது; அவ்வளவுதான். ''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன். ஆகவே அவன்

நரகத்திலிருந்து வந்தான். ஆகவே கவனியுங்கள்.... அவன் சபைக்குள்ளாக எவ்வளவாக கள்ளத்தனமாக பதுங்கிச் செல் கிறான். அவனால் முடிந்த வரை மிக உயரிய ஒரு நிலைக்கு வரு கிறான். பாருங்கள். அவன் எவ்வளவு வஞ்சிக்கிறவனாகயிருக் கிறான், யூதாஸ் எவ்விதமாக வந்தான்? அவன் என்னவாக இருந்தான்? ஒரு பொருளாளர், பொக்கிஷ தாரியாக இருந்தான், ஒரு சகோதரனாக சபையில் கிரியை செய்து கொண்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, ஒரு... (ஒலிப் பதிவு முழு நிறைவு பெறாத நிலையில் முடிவுறுகிறது - ஆசி.)

## 59-12-23 கேள்விகளும் பதில்களும் COD #11

----------

144 அவர் சிலுவையண்டை இரக்கத்திற்காக கதறினபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார். அவர் கதறி, "நான்

தாகமாயிருக்கிறேன்" என்று கூறினபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார். அவர் மரித்தபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார், ஆனால் ஈஸ்டர் காலையிலே அவர் மரணம், நரகம், கல்லறையின் முத்திரைகளை உடைத்து மீண்டும் உயித்தெழுந்த போது, அவர் ஒரு மனிதனைப் பார்க்கிலும் மேலானவராயிருந்தார். அது தேவன் வெளிப்பட்டதாயிருந்தது. புலவன் இவ்வாறு கூறினதில் வியப்பொன்றுமில்லையே:

ஜீவிக்கும்போது, அவர் என்னை நேசித்தார்; மரிக்கும் போது, அவர் என்னை இரட்சித்தார்; அடக்கம்பண்ணப்பட்டபோது,

அவர் என் பாவங்களை அதிதூரம் கொண்டு போய்விட்டார்; உயிர்த்தெழுந்தபோது, அவர் இலவசமாய்

என்றென்றைக்குமாய் நீதிமானாக்கினார்; என்றொ ஒரு நாள் அவர் வருகிறார் - ஓ,

மகிமையான நாள்!

**60-04-02 இதை விசுவாசிக்கிறாயா?**

-----------------

117. இந்நாட்களில் இவ்வாறு அவர்கள் கூறுகிறார்கள்: ''நல்லது, பிரசங்க பீடத்திலிருந்து 'நரகம்' என்ற சொல்லை உபயோகிப்பதை நாங்கள் விசுவாசிக்கவில்லை'' என்கின்றனர். ஓ இரக்கம் வேண்டும். ஊ! தேவனுடைய வார்த்தையை அடக்கி வைக்காத தேவ மனிதனே நமக்குத் தேவை.

**61-01-08 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #3**

-----------------

234. ஆம், அவர் சிலுவையில் இரக்கத்துக்காக அழுதார். அது உண்மை .

அவர் சிலுவையில் தாகமாயிருந்தார். அவர் ஒரு மனிதனைப் போல் மரித்தார். ஆனால் ஈஸ்டர் காலையன்று தேவதூதன் கல்லைப் புரட்டின போது, மரித்துப்போன ஒரு மனிதன் மரணம், நரகம், பாதாளம் என்பவைகளை வென்று வெளியே வந்து, மரணம், நகரம், பாதாளத்தின் மேல் வெற்றி சிறந்தார். அவர், "மரித்தேன், இதோ சதாகாலங்களிலும் உயிரோடி ருக்கிறேன்" என்றார். அது மனிதனைக் காட்டிலும் மேலான ஒன்று. அது அந்த மனிதனுக்குள் தேவன். ஆம், ஐயா.

**62-02-18 விடாமுயற்சி**

----------

190. நீ யார்? சிலர் நரகம் இல்லையென்று வாதிக்கின்றார்கள், நீங்கள் ஒவ்வொருநாளும் நரகத்தின் மேலலேயே உட்கார்ந்திருக்கிறீர்கள்... 8000 மைல் அகலத்திற்கு உங்களுடைய கால்களுக்கடியில் எரிமலைப் போன்ற

குழம்பு இருக்கின்றது, இப்படியிருக்க, நீங்கள் மேலே நோக்கிப் பார்த்து தேவனையும் அவருடைய வார்த்தை யையும் மறுதலிக்கின்றீர்கள்! நீங்கள் தேவனுடைய வார்த்தையை மறுதலிப்பதென்பது தேவனையே மறுதலிக்கிறதாகும். நிச்சயமாக அது தான் சரி. ஓ! கர்த்தாவே, நீர் எவ்வளவு மகத்துவமானவர், நாங்கள் எவ்வளவு உத்தமர்களாயிருக்க வேண்டும்.

**62-03-18Mஉரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #1**

-----------------

48. விஞ்ஞானம் ஆராயமுற்பட்டு, நல்லது, இந்த மனிதன் சுகமடைந்துவிட்டான் என்று கூறுகிறீர்கள். இவனை நான் கொண்டுசென்று பரிசோதனை செய்து பார்க்கட்டும். அவனுக்கு என்ன நேர்ந்ததென்று பார்க்கட்டும். உனக்கு இங்கு முன்பு சதை

வளர்ந்திருந்ததாக கூறுகிறாய் அல்லவா?'' என்கிறது.

''ஆம், இங்குதான்''

''நல்லது, நான் விஞ்ஞான ஆராய்ச்சி செய்து, அது மறைந்துவிடாமல் உள்ளே பதிந்து விட்டதா என்று காணட்டும். நீ ஒரு காலத்தில் குருடனாயிருந்தாய், இப்பொழுது காண்கிறாய் என்று கூறுகின்றாய். நான் எப்படி நம்புவது? அதை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்து பார்க்கட்டும்.''

அவர்கள் வேண்டுமானால் ஆராய்ந்து பார்க்கட்டும். ஆனால் நான் சரீரப்பிரகாரமான அனைத்துக்கும் கூட சுதந்தரவாளியாயிருக்கிறேன். அது மாத்திரமல்ல, விஞ்ஞானம் ஆராய முடியாத காணக்கூடாத வைகளுக்கும் நான் சுதந்தரவாளியாயிருக்கிறேன். ஆமென். ஆமென் காணக்கூடாதவைகள், ஆமென், அதற்கும் நான் சுதந்தரவாளி.

இந்த பூமிக்கு நான் சுதந்தரவாளி, நீங்கள் சுதந்தரவாளி. ஒவ்வொரு விசுவாசியும் அதற்கு சுதந்தரவாளி. சரி, அப்படியானால் காணக்கூடாதவைகள்! அவர் எதை உடையவராயிருக்கிறார்? வானத்தையும் பூமியையும். ஆமென். எல்லாமே ! அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

நீங்கள், ''சகோ. பிரன்ஹாமே, நாம் காணக்கூடாத அங்கிருப்பவைகளை குறித்தென்ன? உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்கலாம். அதுவும் என்னுடையதே ஆமென். பரலோகம் எனக்குச் சொந்தமானது. அது என்னுடையது. தேவன் அவ்வாறு கூறியுள்ளார். அது உண்மை. ''நீங்கள் தான் அதை கண்டதில்லையே, அது அங்குள்ளதென்று உங்களுக்கு எப்படிதெரியும்?'', நான் காணாவிட்டாலும் அது அங்குள்ளதென்று எனக்குத் தெரியும். அங்குள்ளதாக தேவன் கூறியுள்ளார். ''அதை நீங்கள் கண்டதில்லையே,

அப்படியிருக்க அதற்கு நீங்கள் சுதந்தரவாளியென்று உங்களுக்கு எப்படி தெரியும்?'' அவருடைய வார்த்தையை நான் விசுவாசிக்கிறேன். ஆமென். நான் சுதந்தரவாளி, நீங்களும் சுதந்தரவாளிகள். நாமெல்லாருமே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் சுதந்தரவாளிகளாகி விட்டோம்.

49. கொரிந்தியர் இரண்டாம் நிருபத்தில் பவுல் என்ன கூறியுள்ளான் என்பதை கவனித்தீர்களா? நாம் மரணத்தையும் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று அவன் கூறியுள்ளான். அதை சிந்தித்துப் பாருங்கள். மரணத்தை சொந்தமாக்கிக்கொள்வதா? ஆம் ஐயா. அது நம் மேல் அக்கறை கொண்டுள்ளது. ஆமென். நல்லது. மகிமை! துப்பாக்கி வெடித்ததைக் குறித்து இப்பொழுது நான் மறந்தே போய்விட்டேன். பாருங்கள். அவன் ஏன் என்னைக் கொல்லவில்லை? அவனால் கொல்ல முடியாத

காரணத்தால்,அதனால் தான் அவன் என்னைக் கொல்லவில்லை. தேவன் அப்பொழுது ஆயத்தமாயிருக்கவில்லை. அவன் விருப்பப்படி அவன் வரக்கூடும். ஆனால் அவன் உங்கள் உயிரை எடுத்துக் கொள்ள முடியாது. ஆமென். மகிமை! நீண்ட நாட்களுக்கு முன்பே, என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவரான இயேசு கிறிஸ்துவை நான் விசுவாசித்தபோது, என் கடனை நான் செலுத்தி தீர்த்து விட்டேன். இப்பொழுது மரணம் நாம் சொல்வதைக் கேட்க வேண்டும். ஆமென்.

“மரணம் நமக்கு சொந்தமா?'' என்று நீங்கள் கேட்கலாம்.

அப்படித்தான் பவுல் இங்கு கொரிந்தியர் நிரூபத்தில் கூறியுள்ளான். மரணத்தையும் நாம் சொந்தமாகக் கொண்டிருக்கிறோம். ஏன்? பவுலின் தலையை வெட்ட அவர்கள் ஆயத்தமான

போது அவன்,“மரணமே, உன் கூர் எங்கே? உன் கூர் எங்கே? உன்னால் என்னை பயப்படுத்த முடியாது'',என்று கூறினான்.

''உன்னை நசுக்கி, கல்லறையில் அடக்கம் பண்ணுவேன். அங்கு நீ அரிக்கப்பட்டு அழுகிப் போவாய்'', என்று மரணம் அவனிடம் கூறினது.

அவனோ, ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்', என்றான். ஆம், ஐயா. மரணம், நரகம், பாதாளம் இவையனைத்தும் எனக்குச் சொந்தம். ஏனெனில் அவர் நமக்காக இவைகளின் மேல் வெற்றி சிறந்திருக்கிறார். சகலத்தையும் உடையவர்

**62-05-06 சகலத்தையுமுடையவர்களாக இருத்தல்**

-----------------

71. இப்பொழுது கவனியுங்கள், ஆபிரகாமுக்கு அயர்ந்த நித்திரை வந்தது - மரணம். அந்த அயர்ந்த நித்திரைக்கு பிறகு அவன் அக்கினிச் சூளையைக் கண்டான். அது நரகம். அது புகைந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பாவியும் அங்கு செல்ல வேண்டியவனாயிருக்கிறான். ஆனால் அதற்கு முன்னால் ஒரு சிறு வெள்ளை ஜூவாலை சென்றது. அந்த வெள்ளை ஜூவாலையைக் கவனியுங்கள். அது பலியாக வைக்கப்பட்டுள்ள துண்டங்களின் நடுவே கடந்து சென்றது. ஆபிரகாமின் சந்ததி மூலம் தேவன் என்ன செய்யப் போகின்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றார்.

தேவன் ஒருவரே என்று யூதர்கள் எக்காலத்தும் நம்பி வந்தனர். தேவன் ஒருவரே. ஆனால் தேவன் இந்த மூன்று சுத்தமான பலிகளின் மூலம், தேவனுடைய திரித்துவம் தேவத்துவத்தின் பரிபூரணமாக

சீரப் பிரகாரமாக ஒருவரில் காணப்படும் என்பதை தெரியப்படுத்துகிறார்.

**62-07-05 யேகோவா யீரே #1**

-----------------

27. சில நாட்களுக்கு முன்பு அதை இங்கு விளக்கி னேன். நான் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கண்டேன். அவர்கள் ஒரு மனிதனை கடலில் இரண்டு மைல் அல்லது ஒரு மைல் ஆழத்தில் இறக்கி விட்டனர். ஒளிக்கதிர்கள் அங்கிருந்து புறப்பட்டு சென்றன. அவர்கள் கடலில் வாழும் பிராணிகளைக் காண்பித்தனர். அப்பொழுது ஒரு மீன் வந்தது - விகாரமாகத் தோற்றமளித்த ஒன்று. அது நள்ளிரவு, அங்கு மிகவும் இருட்டாக இருந்தது. அவைகளுக்கு முக்கில் பாஸ்வரம் (phosphorus) இருந்தது, கண்கள் இல்லை. அவை இரை தின்ன வேண்டும். எனவே அவை இரை தேட வேறொரு புலன் மூலம்

வழிநடத்தப்பட்டன. கண் பார்வையினால் அல்ல. ஏனெனில் அங்கு உபயோகிக்க அவைகளுக்கு கண்கள் இல்லை. தங்கள் இரையைக் கண்டுபிடிக்க, அவை வேறொரு. புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. "நான் மாத்திரம் என் பார்வையினால் அந்த மீனை கட்டுப்படுத்த முடியு மென்றால், அதை வெவ்வேறு இடங்களுக்கு நடத்திச் சென்று, எவ்வளவு அதிகமாக அதற்கு இரையை அளிக்க முடியும்? அது தொடர்பு கொள்ளும் ரேடாரை'க் (radar) காட்டிலும் என் பார்வை எவ்வளவு மேலானது என்று எண்ணினேன்.

28. அப்பொழுது எனக்கு இது மனதில் தோன்றினது: "நான் மாத்திரம் என்னை முழுவதுமாக தேவனிடம் அர்ப் பணித்தால், தேவனுடைய பார்வையும் புலன்களும் எவ்வளவு அதிகம் சக்தி வாய்ந்தவை! நாம் காண்பவைகளைக்

காட்டிலும் இன்னும் அதிகமாக நம்மை வழிநடத்தக் கூடியவர் யார்? ஏனெனில் அவர் நமக்களிக்கும் விசுவாசம் நம்முடைய கண் களினால் நாம் காணாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது. அந்த மீன் மற்ற மீன்களைப் போலவே மேலே வரமுடியாது. ஏனெனில் அது அழுத்தம் கொண்டுள்ளது. அதை நீங்கள் மேலே கொண்டு வந்தால், அது வெடித்து விடும் - நாம் உயர செல்லும் போது, வெடிப்பதை தடுக்க முடியாதது போல. நாம் வாழும் இடத்துக்கு ஏற்றவாறு அழுத்தம் கொண்டுள்ளோம்.

29. அந்த சிறிய மீன் மாத்திரம் இங்கு வந்து என்னைப் போல ஆக நேர்ந்தால், அது மறுபடியும் அந்தகாரத்துக்கு சென்று சிறு மீனாக இருக்க விருப்பம் கொள்ளுமா? அதற்கு மறுபடியும் மீனாக இருக்க விருப்பம் இருக்காது; ஏனெனில் அது மீனைக் காட்டிலும் உயர்ந்தது, அது ஒரு மனிதன். அதன் புலன்கள்

உயர்ந்தவை, . அதன் புரிந்து கொள்ளும் தன்மை மேலானது. அதன் அறிவு உன்னதமானது. அதை ஒரு கோடியில் பெருக்குங்கள், அதை தான் நீங்கள் இங்கிருந்து மேலே தேவனுடைய சமுகத்துக்கு செல்லும்போது பெறுவீர்கள். அப்பொழுது ஒரு மனிதன் இங்கிருந்ததைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையை அடைவான். நீங்கள் மறுபடியும் மனிதனாக இருக்க, வியாதியும் அழிவும் நேரிடக் கூடிய பூச்சரிக்கும் இந்த சீரத்தில் வாழ, ஒருபோதும் விரும்பமாட்டீர்கள். நான் முப்பது ஆண்டுகளாக உலகம் முழுவதும் இந்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களிடம், ஆதாயமாகப் பெற்றுக் கொள்ள பரலோகம் ஒன்று உண் டென்றும், நாம் புறக்கணிக்க வேண்டிய நரகம் ஒன்று உண் டென்றும், உங்களை நேசிக்கும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், மீட்கும் வல்லமை ஒன்று உண்டென்றும், அதை நீங்கள்

ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயுள்ள எந்த நேரத்திலும் உங்களிடம் வர அது காத்திருக்கிறது என்றும் கூறி வந்திருக்கிறேன். இதுவே – என் இருதயத்தில் இருந்து வந்திருக்கிறது.

30. தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதன் அங்கு ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, அந்த கயிற்றை பிடித்துக் கொண்டு என்னால் மேலே வர முடியும். ஆனால் அந்த கயிற்றைப் பெற நான் பாத்திரன் அல்ல" என்று சொல்வது போல். நீங்கள் தண்ணீரை விட்டு வெளியே வந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே அந்த கயிறு அங்கு வைக்கப் பட்டுள்ளது. பாவிகளை இரட்சிக்க வேண்டும் என்னும் நோக் கத்துக்காகவே இயேசு கிறிஸ்து மரித்தார். அவர் நித்திய ஜீவன் என்னும் கயிற்றை தொங்க விட்டிருக்கிறார். அது இன்றிரவு ஒவ்வொரு பாவியின்

தலைமேலும், அதை விட்டு வெளியே வா" என்று எழுதப்பட்டுள்ள வரவேற்பு அட்டை யுடன் ஆடிக் கொண்டிருக்கிறது. அப்படி செய்ய நீங்கள் விரும்பினால், அதற்கான ஆயத்தம் செய்யப்பட்டு விட்டது.

**62-09-08 என் ஊழியத்தின் தற்போதைய கட்டம்**

--------------

151. கீழ்ப்ப டிதல், ஓ, அவள் இப்படி கூறுகிறாள்: "உங்கள் வேதாகமக் கதைகளை வேறு யரிடமாவது கூறுங்கள். உங்கள் தேவனை வேறு யாருக்காகிலும் அறிவியுங்கள், என்னைத் தனியே விட்டு விடுங்கள், எதைக் குறித்து நீங்கள் சத்தமிடுகிறீர்கள்? இவைகளைக் கூறும்படி நான் உங்களிடம் கேட்கவில்லையே!" அது உண்மைதான். ஆனால் உன்னிடம் கூறும்படி தேவன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். பாருங்கள்? அவ்வளவுதான்.

152. எனவே அவர்கள் அவ்விதம் சீர்கேட்டை அடைகின்றனர், அந்த நாளில் அவர்கள் செய்தது போல, இந்த நாளிலும் இவர்கள் செய்கின்றனர். அது சிறிதேனும் மாறவில்லை. அது மாறப் போவது மில்லை .

153. சிறுவர் புரியும் குற்றம் (Juvenile Delinquency) சிறுவர்களைப் பாதிக்கிறது. ஒரு பாகம் பெண்களையும் ஆண்களையும் சிறை ஏற்றுக் கொள்கிறது. எல்லாவற்றையும் நரகம் ஏற்றுக் கொள்கிறது. அது முற்றிலும் உண்மை . அக்கினி எல்லாவற்றையும் விழுங்கிவிடும். இந்த பிரசங்கம் அவர்கள் பின்னால் சென்றுவிடும். அவர்கள் அதற்கு செவிகொடுக்க மாட்டார்கள். வேதம் இவ்வாறு கூறி யுள்ளது என்று அவர்களுக்கு எடுத்துரைத்தால், "உங்கள் வேதாகமத்தை நீங்களே வைத்துக்

கொள்ளுங்கள். நாங்கள் குதூகலமாக இருக்கப் போகிறோம்” என்கின்றனர்.

## 63-06-23E அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு

-----------------

ஓ, அப்படியானால், அந்த காலையில் சீயோனின் கப்பல் ஊதும் சத்தத்தை நான் கேட்டு, கொடிகள் அங்கு ஆட்டப்படுவதை நான் காணும் போது எப்படியிருக்கும்! யுத்தம் முடிந்து வெற்றி பெற்றவுடன்! அல்லேலூயா! நாம் வீடு திரும்புவோம். அங்கு மரணம், பாவம், நரகம் அனைத்தும் ஜெயங்கொள்ளப்பட்டுவிட்டது. அங்கு இனி பாவம் இல்லை, இனி மரணம் இல்லை, இனி துக்கம் இல்லை, அந்த ஊதல் ஊதும் சத்தத்தை நான் கேட்கிறேன்! ஓ, நாம் நகரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். ஆம், ஐயா. கரையில் மோதிச் சிதறும் அலைகள்

நெருங்குகின்றன. அந்த கப்பல் அது சேர வேண்டிய இடத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. தேவனே, அந்த நேரத்துக்காக வாழ எங்களுக்கு உதவி புரிவீராக!

## 63-07-24 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

----------------

66. புகழ் வாய்ந்த சிலரைச் சந்திக்கும் சிலாக்கியம் எனக்கு கிடைத்ததுண்டு. மாற்று உடையும் கூட இல்லாமல், ஜேபியில் ஐம்பது சென்டு வைத்திருப்பவன்தான், அவன் ஒன்றுமில்லாதவனாயிருக்கும்போதே தன்னை உயர்ந்தவன் என்று நினைத்துக்கொள்பவன். நான் உயர்ந்த மனிதர்களுடன் நின்றதுண்டு. அவர்கள் கிழிந்த சட்டைகள் அணிந்து, நீங்கள் உயர்ந்தவர்கள் என்று நினைக்கும்படி

செய்துவிடுகின்றனர். பாருங்கள், பெருந்தன்மை என்பது தாழ்மை. சபையே, அதை மறந்துவிடாதே! பெருந்தன்மை எப்பொழுதும் தாழ்மையில் வெளிப்படுகின்றது, நீங்கள் எவ்வளவு அழகாக உடுத்தியிருக்கி றீர்கள் என்பதில் அல்ல.... நீங்கள் அழுக்காக இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆவியின் தாழ்மையைக் குறித்து கூறுகிறேன். நீங்கள் சென்று உங்கள் உடைகளை துவைக்கவில்லை என்னும் அர்த்தத்தில் கூறவில்லை. நீங்கள் அதை செய்ய வேண்டும், அது உங்களுக்குத் தெரியும். பாருங்கள்? ஆனால் நான் தாழ்மையை - உண்மையான தாழ்மையைக் குறிப்பிடுகிறேன். தாழ்மையாயுள்ளதைப்போல் பாவனை செய்வதல்ல, உண்மையான தாழ்மையை .

67. அதை எப்படி செய்யவேண்டுமென்று இயேசு நமக்கு கூறியிருக்கிறார். அவர்

ஜெயங்கொண்டார். ஜெயங் கொள்ளுதல் என்றால் “சோதனையை மேற்கொள்ளுதல்' என்று பொருள் (அது உண்மை !) - பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் செய்தது போல். இயேசு செய்தது போல், இயேசு தமது சத்துருக்களின் மத்தியில் சோதனையை மேற்கொண்டார். வியாதி அவரை சந்தித்தபோது, மேசியாவாகிய அவர் அவர்களை சுகப்படுத்தினார். மரணம் அவரை சந்தித்தபோது அவர் அவர்களை உயிரோடெழுப் பினார். கல்வாரியில் தமது சொந்த மரணம் அவரைச் சந்தித்து போது, அவர் தம்மை ஒப்வித்ததன் மூலம் அதன் மேல் வெற்றி சிறந்தார். எப்படி? வார்த்தையின் மூலம். அவர், ''இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்'' என்றார். (யோவான் 2:19). வார்த்தை அவ்வாறு உரைத்திருந்தது. பாருங்கள்? மரணம் அவரைச் சந்தித்தபோது, அவர்

அதன் மேல் வெற்றி சிறந்தார். அவர் மரணத்தை ஜெயங்கொண்டார். நரகம் அவரை சந்தித்த போது, அவர் அதன் மேல் வெற்றி சிறந்து நரகத்தை ஜெயங் கொண்டார். ஆம்! கல்லறை அவரை சந்தித்தபோது, அவர் கல்லறையை ஜெயங்கொண்டார். எப்படி? வார்த்தையினாலும் தாழ்மையினாலும். ஓ, என்னே! அவர் தான் உண்மையான மனிதன். அவரைத்தான் உங்கள் உதாரணமாக நீங்கள் கொள்ள வேண்டும். பாருங்கள். அவர் எல்லாவற்றின் மேலும் வெற்றி சிறந்து, ஜெயங்கொண்டார்.

68. பாருங்கள். அவர் சோதிக்கப்பட்டார். அது உங்களுக்குத் தெரியுமா? அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது (எபி. 4:15). அவர் மது அருந்தும் விஷயத் தில் சோதிக்கப்பட்டார். அவர் பெண்களால் சோதிக்கப்பட்டார்.

அவர் எதைக்கொண்டெல்லாம் சோதிக்கப்பட வேண்டுமோ, அவர் அனைத்தினாலும் சோதிக்கப்பட்டார். நாம் சோதிக்கப்படுவது போல் அவர் சோதிக்கப்பட்டார். அவர் மனிதன். இருப்பினும் யாரும் அவரைக் குறை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆம், ஐயா

ஜெயங்கொள்ளுதல் என்றால், 'பிசாசின் தந்திரங்கள் ஒவ்வொன்றையும் கண்டு கொள்ளுதல் என்று அர்த்தம். அநேகர் பிசாசு என்று ஒன்றில்லை என்றும், அது வெறும் கற்பனையே என்றும் கூறுகின்றனர். அதை நம்பாதீர்கள். பிசாசு உண்மையாகவே இருக்கிறான். நீங்கள் இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையாக பிசாசு இருக்கிறான். அவனை நீங்கள் கண்டுகொள்ள வேண்டும். அவன் பிசாசு என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அவன் பிசாசு மற்றும், அவன் உங்களுக்கு விரோதமாயிருக்கிறான் என்றும்

அறிந்துகொண்ட பின்பு, அவனை ஜெயங்கொள்ள வேண்டுமானால், உங்களிலிருக்கி தேவன் அவனை விட பெரியவரும் வல்லமையுள்ளவரென்றும், உங்களிலிருக்கிற அவர் அவனை ஏற்கனவே ஜெயங்கொண்டு விட்டாரென்றும், அவருடைய கிருபையினால் போராட்டத்தில் அவனை நீங்கள் மிஞ்சிவிடமுடியும் என்பதை அறிந்திருக்கவேண்டும். ஆமென் அது தான் உண்மையான ஜெயங்கொள்ளுதல்.

நீங்கள் கண்டுகொள்ளும்போது ....

**63-08-25M நான் எப்படி ஜெயங்கொள்வது?**

-----------------------

61 நான் தேவனுடைய கிருபையினால் இரண்டு ஸ்தலங்களையுமே தரிசனத்தில் கண்டேன் (நான் அவபக்தியாயிருக்க வேண்டுமென்று இதைக் கூறவில்லை. அது தவறாயிருக்குமானால், தேவன் என்னை மன்னிப்பாராக), நான் இரண்டு

ஸ்தலங்களிலுமே இருந்திருக்கிறேன் என்று நம்புகிறேன் - இரண்டு ஸ்தலங்களிலும் - நான் மீட்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்களை கண்டிருக்கிறேன். நான் இழக்கப்பட்டவர்களையும் அவர்கள் எங்கிருந்தனர் என்பதையும் கண்டிருக்கிறேன். அதனால்தான் உங்களுடைய சகோதரனாக இன்று நான் நின்று, கீழ் நோக்கிச் செல்லும் அந்த பாதையிலிருந்து விலகி ஓடுங்கள் என்று உங்களை எச்சரிக்கிறேன். அந்தப் பாதையில் நீங்கள் ஒருபோதும் செல்லவேண்டாம்.

அந்த ஆசீர்வதிக்கப்பட்ட மேல்நோக்கிச் செல்லும் வழியில் செல்வதற்கென, ஜீவிப்பதற்கான எல்லாவற்றையும் நீங்கள் கொண்டவர்களாக இருக்கிறீர்கள். அங்கு மீட்கப்பட்டவர்கள் சமாதானத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் பாவம் செய்ய முடியாது. அவர்கள் வருத்தமாயிருக்க முடியாது. அங்கு அப்படியொன்றும் இல்லை - அவர்கள் பரிபூரணமானவர்கள். நான் இரண்டு ஸ்தலங்களையும் கண்டிருக்கிறேன். ஒருவன் அப்படிப்பட்ட வாக்குமூலத்தை அளிப்பது பயங்கரமானதென்று அறிவேன். ஆனால் தேவன் என் நியாயாதிபதி. நான் அந்த இரண்டு ஸ்தலங்களையும் கண்டிருக்கிறேன் என்று பயபக்தியுடன் நம்புகிறேன். அதை நான் நம்புகிறேன்.

62 இழக்கப்பட்டவர்களின் ஸ்தலத்தில் பிரவேசிப்பதென்பது எந்த ஒருவனுக்கும் தூரமாயிருப்பதாக! இங்கு சூடான இரும்புக் கம்பிகளினால் நீங்கள் துளைக்கப்பட்டு எல்லா விதங்களிலும் துன்புறுத்தப்பட நேரிட்டால், அந்த இடத்தில் பிசாசானவன் உங்களை உபத்திரவப்படுத்துவதுடன் இதனை ஒப்பிடும்போது, இது ஒன்றுமில்லை.

அதற்கு எதுவுமே ஈடாகாது. மனித சிந்தை கிரகித்துக்கொள்ள முடியாது. இழக்கப்பட்டோரின் ஸ்தலம் எவ்வாறு உள்ளது என்பதை மனித சிந்தை கிரகித்துக் கொள்ளவே முடியாது. அதை விவரிக்கவே முடியாது. அது போன்று, ஆசீர்வதிக்கப்பட்டோரின் ஸ்தலம் எவ்வாறு உள்ளது என்பதையும் விவரித்துக் கூறவே முடியாது. அது மிகவும் மகத்தானது. ஒன்று மிகவும் பயங்கரமானது. மற்றது மிகவும் மகத்தானது - கேலிப் பரியாசத்திலிருந்து உயர்வானதற்கு செல்வதைப் போன்றது.

எனவே, ஒருவன் எனக்கு செவி கொடுத்தால்...

63 நான் வயோதிபனாகி வருகிறேன். இன்னும் எவ்வளவு காலம் எனக்குண்டு என்பதை அறியேன். விரைவில் எனக்கு ஐம்பத்தைந்து வயதாகிவிடும். இயற்கையின் விதியின்படி, நான் அநேக

ஆண்டுகள் உயிர்வாழ முடியாது. இந்த ஒலிநாடா எங்கு செல்லும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இங்குள்ள ஒவ்வொருவருக்கும், இந்த ஒலிநாடா எங்கெல்லாம் செல்கின்றதோ அதை கேட்பவர்களுக்கும் நான் கூறுவது என்னவெனில்; இழக்கப்பட்டோரின் ஸ்தலத்திற்கு நீங்கள் ஒருக்காலும் செல்லவேண்டாம். நரகம் எவ்வளவு பயங்கரமாயுள்ளது என்பதை நீங்கள் கற்பனை செய்யவே முடியாது. நீங்கள் என்ன செய்தாலும், இதை மறந்து போகவேண்டாம்.

ஆசீர்வதிக்கப்பட்டோரின் ஸ்தலம்... இதை நான் பரி. பவுலுடன் சேர்ந்து கூற விரும்புகிறேன்: “தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.''

எனவே, நீங்கள் இந்த ஒலி நாடாவைக் கேட்டுக் கொண்டிருக்க நேரிட்டால், அதை நிறுத்திவிட்டு, நீங்கள் ஏற்கனவே இரட்சிக்கப்படவில்லையென்றால், மனந்திரும்பி தேவனோடு சீர்ப் பொருந்துங்கள்.

## 63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்

-------------

123. நாம் இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம்? (சபையார் ''ஆமென்“ என்கின்றனர் - ஆசி.) அந்த வசனத்திற்கு வேதாகமத்தைத் திருப்புவோம். ஏனெனில் ”அதைப் படி“ என்று எழுதி வைத்திருக்கிறேன். அதில் ஏதோ ஒன்றை நான் வாசிக்க எண்ணினேன். வேறெதாவதொன்றைக் குறைத்துவிடுகிறேன், ஆனால் இதை ஒரு நிமிடம் படிப்போம். மத்தேயு: 23, ஒரு நிமிடம். சரி. நாம் 27-ம் வசனத்திலிருந்து

தொடங்குவோம். இப்பொழுது கவனியுங்கள். நீங்கள் வீட்டிற்குச் சென்று, உங்களால் முடிந்தால், முழு அதிகாரத்தையும் வாசியுங்கள். இன்னும் சில நிமிடங்கள். இப்பொழுது இங்கு கவனியுங்கள். மத்தேயு: 23, 27-ம் வசனத்திலிருந்து தொடங்குவோம்.

''மாயக்காரராகிய வேதபாரகரே!.. (அவர் பரிசுத்தமான மனிதரிடம் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்) மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள் (அதாவது மரித்தவர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்.

அவர்களுக்குள்ளே மாய்மாலமும், பொறாமையும், விரோதமும்; ஆனால் புறம்பே “நான் டாக்டர் இன்னார் இன்னார்''

அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள் (உலக சபைகளின் ஆலோசனை சங்கமும் பெந்தெகொஸ்தேயினரும் அங்கு உட்கார்ந்து கொண்டிருப்பதை பாருங்கள்); உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.

அக்கிரமம் என்றால் என்ன? அது சரியென்று உங்களுக்குத் தெரிந்திருந்தும் அதை செய்யாமலிருப்பது. இயேசு - எந்த சந்ததியின்மேல் இதை சுமத்துகிறார் என்று கவனியுங்கள்.

மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி,

நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து பாருங்கள்? ஹா, தீர்க்கதரிசிகளின் எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்க மாட்டோம் என்கிறீர்கள்.

அக்காலத்தில் நாங்கள் வாழ்ந்திருந்தோமானால், நாங்கள் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்திருப்போம். கவனியுங்கள்.

ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம் அளவை நிரப்புங்கள்

அதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. அவர் இங்கு என்ன சொல்லுகிறார் என்று கவனியுங்கள்.

சர்ப்பங்களே, விரியன் பாம்புக்குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?

மத்: 23: 27-33

124. நீங்கள் எப்படி தப்பித்துக் கொள்வீர்கள்? அவர் போதகர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். அது உண்மை - பரிசுத்தமான மனிதர். வேதம் முன்னுரைத்து இவைகளைச் செய்யக்கூடாது என்று ஜனங்களிடம் சொல்லியிருக்கும்போது, சில மோசமான நாற்றமெடுக்கும் டாலர்களுக்காக, அல்லது செல்வாக்குக்காக, அல்லது யாராகிலும் உங்கள் முதுகில் தட்டி உங்களை "டாக்டர் என்று அழைக்கவேண்டும் என்பதற்காக, நீங்கள் எப்படி ஒப்புரவாக முடியும்? அந்த ஜனங்களை நீங்கள் நேசிப்பதாக எப்படி கூறமுடியும்? (என் பிரசங்கம் ஒலிநாடாவிலும் பதிவு செய்யப்படுகிறது).

அந்த ஜனங்களை நீங்கள் நேசிப்பதாக கூறிக்கொண்டு, அப்படிப்பட்ட காரியம் நிகழ்வதை நீங்கள் எப்படி அனுமதிக்கமுடியும்? பரிசேயர்களே, குருடர்களே, சர்ப்பங்களே, நரகாக்கினைக்கு நீங்கள் எப்படி தப்பித்துக் கொள்ளப் போகிறீர்கள்? இன்று ஒரு மனிதன் இவைகள் தவறு என்று தெரிந்து கொண்டு, அதே சமயத்தில் அங்கு நின்றுகொண்டு தன் சபையை வளரச் செய்து, இவைகளை பெண்களிடமும் ஆண்களிடமும் எடுத்துக் கூற எப்படி தவற முடியும்? நரகம் உங்களுக்கென்று உண்டாக்கப்பட்டிருக்க, நீங்கள் எப்படி நரகாக்கினைக்குத் தப்பித்துக் கொள்ள முடியும்? நீங்கள் எப்படி தப்பித்துக் கொள்ளப் போகிறீர்கள்? கவனியுங்கள், இங்கு கவனியுங்கள், அது என்னவாக இருக்கப் போகிறது?

**63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்**

---------------

294. நான் சிறுவனாக இருந்தபோது நரகத்தைக் குறித்த ஒரு தரிசனத்தைக் கண்டேன். அத்தகைய ஒரு காட்சியை நான் காணாதிருந்திருப்பேனானால் நான் கூறுவது தவறாயிருக்கும். அத்தரிசனத்தில் நான் கண்ட காட்சியானது அவ்வளவு தத்ரூப மாயிருந்தது.

295. இழந்து போனவர்களின் அந்த தேசத்தில் நான் காணப்பட்ட போது நான் மிகவும் அலறினேன்.தேவனே இந்த ஸ்தலத்திற்கு வேறு எவரையும் வர அனுமதியாதேயும்!" என்று கூக்குர லிட்டேன். அதன் பயங்கரங்களை எந்த நாவினாலும் விவரிக்க இயலாது. அக்கினியும் கந்தகமும் எரிகிற நரகம் என்ற ஒன்றை நீ விசுவாசிப்பாயானால், இழந்து போன நிலைமையின் பயங்கரங் களுக்கும், அதைப் பின்னியிருக்கும் ஆழ்ந்த உபத்திரவங்களுக்கும் அதை

ஒப்பிடும் போது நரகமானது பார்வைக்கு குளிர்ச்சி யானதாயும் பசுமையானதாயும் காணப்படும்.

296. சமீபத்தில் நான் ஆசீர்வதிக்கப்பட்டோர் உள்ள ஸ்தலத்தையும் கண்டேன். மனிதனுடைய புரிந்து கொள்ளுவதற்கு அப்பாற்பட்ட காரியங்களை நான் பேச முயற்சிப்பேனானால், அதை எவ்விதம் விவரிப்பேன் என்பதை அறியாதவனாய் இருக்கிறேன். அது எவ்வளவு சமாதானமாயும், ஒரு போதும் அழியாத வயோதிப பருவம் அடையாத, வியாதியுராமல் நித்திய ஜீவனுடைய, வாலிபமாகவும், சுகதேகியாகவும், பாவமென்ற ஒன்று குடியிராத இடமுமாய் அது இருக்கிறது. அதை எவ்விதத்திலும் விவரிக்க இயலாது!

297. ''எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூருகிறவர் களுக்கு

ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்ற வுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினால் வெளிப்படுத்தினார்'' (1கொரி: 2:9-10) என்று பவுல் கூறினான். ஆம் அதை விவரிக்க வழியேயில்லை!

63-11-24E மூவகை விசுவாசிகள்

--------------

204. நார்வேயில் ஒரு கதையை அவர்கள் கூறுகின்றனர்.... இல்லை, என்னை மன்னிக்கவும்...... சுவிட்சர்லாந்தில். அங்கு நான் மிஷனரியாக சென்றிருந்த போது பெரிய வெள்ளிக்கிழமையன்று அங்கு உலகம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர் கூடுவ தாகக் கூறுகின்றனர். பிலாத்து தற்கொலை செய்து கொண்ட ஒரு குளம் அங்குள்ளதாம். அந்த தண்ணீரில் தான்

அவன் விழுந்து முடிவில் தற்கொலை செய்து கொண்டானாம். ஒவ்வொரு பெரிய வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 3.00 மணிக்கு, தண்ணீர் நீலநிறமாக மாறி, பிலாத்துவின் பிணம் மிதந்த இடத்தில் அது கொதிக்கத் தொடங்குகின்றதாம். அவன் அதைப் புறக்கணித்தான். அவனுடைய கரங்களில் இன்னும் இரத்தப் பழி உள்ளது. அவன் புறக்கணித்தான்... அவர் தண்ணீரினால் கழுவப்பட மறுத்தார்.

அவரை நீங்கள் உங்கள் கரங்களிலிருந்து கழுவி விட முடியாது. அதை கழுவி சுத்திகரிக்க எந்த தண்ணீரும், சோப்பும் கிடையாது. அவர் உங்கள் கரங்களில் இருக்கிறார். அவரை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

205. நீங்கள் செய்யக் கூடிய ஒரே காரியம் இது தான். நீங்கள் அவரை உங்கள் கைகளிலிருந்து கழுவி விட முடியாது; அவரை வேறு யாரிடமாவது

தள்ளி விட முடியாது. அப்படி செய்ய உலகில் எந்த வழியும் இல்லை. நீங்கள் செய்யக் கூடிய ஒன்றே ஒன்று அவரை உங்கள் கரங்களிலிருந்து போக்கி, உங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது உங்கள் கரங்களிலேயே வைத்திருந்து நியாயத்தீர்ப்பில் நில்லுங்கள். அது ஒன்று மாத்திரமே உங்களால் செய்ய முடியும்.

பிலாத்துவின் முடிவு பயங்கரமானது.

206. அவரைத் தங்கள் கரங்களில் வைத்திருப்பவர்களுக்கு நேரிடும் கதியைக் குறித்து வசனம் கூறுகிறது (அதை நான் படிக்கலாம் என்று நினைத்தேன்). அது, அவர்கள் மலைகளையும் குன்றுகளையும் நோக்கிக் கதறினார்கள். ஆனால் அவர்களுடைய ஜெபங்கள் நேரம் கடந்த பிறகு ஏறெடுக்கப்பட்டன'' என்றுரைக் கிறது (பாருங்கள்?) ''அவர்கள் பர்வதங்களையும் கன்மலைகளையும்

நோக்கி; நீங்கள் எங்கள் மேல் விழுந்து சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவரு டைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள். அவருடைய கோபாக்கினையின் நாள் வந்து விட்டது. யார் நிலைநிற்கக் கூடும்'' என்பார்கள்.

207. ஆஸ்வால்டு உயர்நீதிமன்றத்துக்குள் நடந்து, அங்கு உட்கார்ந்திருக்கும் 'ஜுரி 'களின் கோபமான கண்களையும் மற்றவர்களையும் காணும் போது என்ன செய்வான் என்று நினைக் கிறீர்கள்? என்ன நடக்கப் போகிறதென்று அவனுக்குத் தெரியும். அது வாயு அறை அல்லது தூக்கு கயிறு அல்லது வேறெதாவதாக இருக்கும். அவன் அதை சந்திக்க வேண்டும்.

208. உங்கள் கரங்களில் இரத்தத்தைக் கொண்டவர்களாய், அதை நீங்கள்

புறக்கணித்து, நரகம் - நித்திய அழிவு - உங்களுக்காக காத்திருக்கிறது என்று அறிந்து நீங்கள் அங்கு நடந்து செல்லும் போது எப்படியிருக்கும்? பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி விண்ணப்பம் பண்ணினாலும், அது காலதாமதமா யிருக்கும்.

**63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்**

-----------

65 நாம் ஆபிரகாமின் இரா ஜரீக வித்தாயிருக்கின்ற படியினால், நம்மில் அன்பு கூர்ந்து, நமக்காக தம்முடைய ஜீவனை தந்த அவராலே இப்பொழுது நாம் முற்றிலும் ஜெயங் கொள்ளு கிறவர்களாய் இருக்கிறோம். அவருக்குள்ளாக இருந்த அதே, தேவனுடைய ஆவியை நமக்குள் கொண்டவர்களாய் நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்.

எல்லா கதவும் நமக்காக ஜெயிக்கப்பட்டாயிற்று. நாம் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் அதை சுதந்தரிக்க வேண்டும். அது ஏற்கனவே ஜெயிக்கப்பட்டாயிற்று. வியாதி ஜெயிக்கப்பட்டாயிற்று மரணம் ஜெயிக்கப்பட்டாயிற்று' நரகம் ஜெயிக்கப்பட்டாயிற்று. பாதாளம் ஜெயிக்கப்பட்டாயிற்று. எல்லாக் காரியங்களும் ஜெயிக்கப் பட்டாயிற்று. அவருடைய கிருபையினாலே நாம் திறவுகோல்களை உடையவர்களாயிருக்கிறோம். அவர்களிலே திறவுகோலை போட்டு ''நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வருகிறேன்” என்று சொல்ல பயப்படுகின்றாயா? "நீங்கள் என் நாமத்தினாலே பிதா வினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ.''.... நான் அவரை நேசிக் கிறேன்.

## 64-02-07 கோத்திர பிதா ஆபிரகாம்

\- - - - - - - - - - - - - - - -

பவுலின் தலையை வெட்ட மக்கள் ஒருபீடத்தைக் கட்டின போது, அவன் “மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்' என்று அவன் கூறியதில் ஆச்சரியமில்லை. ''மரணமே, நீ எங்கே என்னை அலரவைக்க முடியும்? பாதாளமே, நீ எப்படி என்னை அடக்கி வைக்க முடியும்? நானோ நித்திய ஜீவனை உடையவனாய் இருக்கிறேன்'' என்றான். ஆமென் அவன் அதை அறிந்துக்கொண்டான். மரணம், நரகம், பாதாளம், ஒன்றுமே அவனை பிடித்து வைக்கமுடியவில்லை. நாம் நித்திய ஜீவனை பெற்றிருப்பதால் ஒன்றுமே நம்மை சேதப்படுத்த முடியாது. அவன் நித்திய ஜீவனால்

ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்திருந்தான்.

## 65-02-21E யார் இந்த மெல்கிசேதேக்கு?

--------------

அஞ்ஞானிகள் பெண்ணை தெய்வமாக வழிபடுகின்றனர், அது உங்களுக்குத் தெரியுமா பெண் தெய்வம்? நிச்சயமாக அவர்கள் அதை செய்தனர், தங்கள் வழிபாட்டில் அவர்கள் இனசேர்க்கை செயல்களைக் கொண்டிருந்த காரணத்தால், அவர்கள் அவளை தெய்வமாக்கினர். அவள் சிருஷ்டிகர் என்று அவர்கள் உரிமை கோரினர். அவள் தன் கர்ப்பத்தில் வித்தை சுமந்து சிருஷ்டித்தாள் என்று அவர்கள் கூறுகின்றனர். அது பொய், சிருஷ்டிகர் ஒருவர் மாத்திரமே. அவர் தான் தேவன். பவுலின் காலத்தில் நடந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா? எபேசுவிலிருந்த தியானாளின் சிலை. கற்பாறையில் செதுக்கப்பட்ட உருவம். அவள்

வானத்திலிருந்து கீழே எறியப்பட்ட தெய்வம் என்று அவர்கள் கூறினர். அஞ்ஞான வழிபாடு எவ்வாறுள்ளதென்று உங்களால் காண முடிகின்றதா? நாம் அதை அறியாமலேயே, அஞ்ஞான வழிபாட்டிற்கு - பூமியிலேயே மிகவும் கீழ்த்தரமான சிருஷ்டியாகிய பெண்ணிடம் - மறுபடியும் திரும்பிவிட்டோம். பெண் வழிபாடு அவள் தன் விருப்பப்படி மனிதனை எந்த பக்கத்திலும் ஆட்டி வைப்பாள். அவளுடைய வெளிப்புற அழகின் உள்ளே நரகம் மறைந்துள்ளது என்பதை அறியாமலிருக்கின்றனர். அவள் வீடு பாதாளத்துக்குப் போகும் வழி என்று சாலொமோன் கூறியுள்ளான்.

60 வெளிப்படுத்தல் 2:15-ல், நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் குறித்து இயேசு என்ன கூறினார் என்று நாம் தெளிவாகக் காண்கிறோம் - அந்த சபை தோன்றி, தன்னை வார்த்தைக்குப் புறம்பாக்கிக் கொண்டது.

மேலும் நாம் இழிவான, தேவனற்ற, அசுத்தமான தொலைகாட்சி நிகழ்ச்சிகளை, ஹாலிவுட் செக்ஸ் ராணிகள் நடத்துவதை தொலைக்காட்சி தெளிவாகக் காண்கிறோம். இந்த சிறு பெண்கள் இறுக்கமான ஆடைகளை அணிந்து தெருக்களில் இங்கும் அங்கும் உடலை நெளித்து நடந்து, தங்களை மரணத்துக்கு உறையச் செய்யும் அளவுக்கு அது குளிராக அமைந்துள்ளது. இதன் மூலம் நாம் நகரத்தின் அசுத்தத்தை காண முடிகிறது. பிசாசு அப்படி செய்யத் தூண்டுகிறான் என்பதை அவர்கள் அறியாமலிருக்கின்றனர். அவர்கள் பிசாசினால் பீடிக்கப்பட்டு அதை அறியாமலிருக்கின்றனர். ஒரு பெண் நாய் அவ்வாறு செய்வதை நீங்கள் காண்பதில்லை, இல்லையா? எந்த பெண் இனமும் அவ்வாறு செய்வதை நீங்கள் காண்பதில்லை. எந்த ஆணும் அவளிடம் நடந்து செல்லாதிருப்பது நலம்.

## 65-02-21M விவாகமும் விவாகரத்தும்

------------------

51. சாத்தானுடைய திரித்துவமாகிய மரணம், நரகம், கல்லறை, ஆகிய இம் மூன்றையும் அவர் ஜெயித்து விட்டதால் அவர் தம்முடைய வார்த்தை சத்தியம் என்று நிருபித்து விட்டார். ஏனெனில் சாத்தான் தான் மரணத்தை உண்டாக்கியவன். நரகத்திற்கும், கல்லறைக்கும் அதிபதி அவனே. மரணமாகிய ஒரு காரியத்தை உண்டாக்கியதன் விளைவாக நீங்கள் கல்லறைக்கும், பாவியாக நரகத்திற்கும் போகிறீர்கள். அது தான் சாத்தானின் திரித்துவம். சாத்தானின் திரித்துவத்தில் ஒன்றாகிய மரணம்தான் இவ்வளவு காலங்களாக மனிதனை அடிமைத்தனத்திற் குள்ளாக்கியது.

52. ஆனால் இப்பொழுது, தேவனுடைய திரித்துவம் கிறிஸ்துவிலே

வெளிப்பட்டது, மெய்யான ஜீவ தேவனாகிய அவரே ஜீவன், அவரே முத்திரைகளை உடைத்து சாத்தானை ஜெயம் கொண்டு உயிரோடு எழுந்தவர். 'நான் மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை
உடையவராயிருக்கிறேன்" (வெளி. 1:18). மனிதனை உண்டாக்கிய ஒன்றான மெய்தேவன் நம் மத்தியிலே வாசம்

செய்து எல்லாப் பகைவர்களையும் ஜெயித்து, சாத்தானின் திரித்துவம் ஜெயிக்கப் பட்டதையும், தேவனுடைய திரித்துவம் வெளியாக்கப்பட்டதையும் நிரூபித்துவிட்டார். ஏனெனில் தேவன் ஒருவர் மாத்திரமே மீண்டும் ஜீவனை திரும்ப அளிக்கும் அதிகாரத்தை உடையவராயிருந்தார். அவரே இம்மானுவேல் தேவன் மாமிசத்திலே தம்மை வெளிப்படுத்தினார்.

53. "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு சாட்சியாக உங்களை நான் உலக முழு வதும் அனுப்புகிறேன்'' என்று அவர் மத்தேயு 27 - ஆம் அதிகாரத்தில் உரிமையுடன் சொல்லியதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. (மத். 28. 18). அவர் மரணத்தையும், நரகத்தையும், கல்லறையையும் ஜெயித்தார். அவர் அவைகளை ஜெயித்ததோடு மட்டுமல்லாமல், வானத்திலும் பூமியிலும் பிதாவுக்கும், பரிசுத்தாவிக்கும், குமாரனுக்கும் உண்டான எல்லா அதிகாரங்களையும் அவருக்குள் உடையவராக மகத்தான வெற்றியடைந்தவராக வெளியே வந்தார். ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. '' மற்றவை எல்லாம் வல்லமையற்றது. அவர் ஒருவரே அதை ஜெயம் சிறந்தார்.

## 65-04-18M இது சூரிய உதயம்

-------------

45. அந்தத் தரிசனம் எனக்கு உண்டானவுடனே, நான் மிகவும் பெலவீனமாயிருந்தேன், நான் எல்லா இரத்தத்தையும் இழந்துவிட்டேன். நான் முடிவற்ற நித்தியத்துக்குள் மூழ்கிக் கொண்டிருப்பதாக நினைத்தேன். இதைக் குறித்து நான் முன்பு கூறினதை உங்களில் அநேகர் கேட்டிருக்கிறீர்கள்-முடிவற்ற நித்தியத்துக்குள் மூழ்கிக் கொண்டிருந்தேன்.

முதலில், நான் மேகங்கள் போல் தோன்றும் ஒன்றின் வழியாக சென்று கொண்டிருந்தேன், பிறகு அந்தகாரத்தின் வழியாகச் சென்று, கீழே படிப்படியாக மூழ்கிக் கொண்டேயிருந்தேன். முதலாவது நேர்ந்தது என்னவெனில், நான் இழக்கப்பட்டவர்களின் ஸ்தலத்தை அடைந்தேன். அங்கு நான் அலறினேன்.

நான் பார்த்த போது, அதற்கு அஸ்திபாரமே இல்லாமலிருந்தது. நான் மூழ்கிக் கொண்டிருப்பதை - நித்தியத்துக்கு - என்னால் நிறுத்த முடியவில்லை... நான் மூழ்கிவிடுவேன் என்பது போல் தோன்றினது. எங்கேயும் அதை நிறுத்த முடியவில்லை.

46. ஜனங்களுடன் மகிமையில் இருப்பதாக நான் சமீபத்தில் கண்ட தரிசனத்துக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம் இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை. இந்தத் தரிசனத்தில் நான் கீழே போய்க் கொண்டேயிருந்தேன். முடிவில் என் தகப்பனாருக்காகக் கதறினேன். நான் சிறுவனாயிருந்தபடியால், அதைத்தான் நான் செய்வேன். என் தகப்பனாருக்காக நான் கதறினேன். என் தகப்பனார் அங்கில்லை. என் தாயாருக்காகக் கதறினேன். “யாராவது என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றேன். அங்கு

தாயாரும் இல்லை. நான் இவ்வாறு கீழே போய்க் கொண்டேயிருந்தேன். நான் தேவனுக்காக கதறினேன். தேவனும் அங்கில்லை.

47. சிறிது கழித்து, நான் ஒருபோதும் கேட்டிராத மிகவும் துக்ககரமான முனகல் சத்தத்தைக் கேட்டேன். அது மிகவும் பயங்கரமான உணர்ச்சியை அளித்தது. வேறு வழியேயில்லை - இத்துடன் ஒப்பிடும் போது எரிந்து கொண்டிருக்கும் நெருப்பும் கூட மகிழ்ச்சியுள்ள ஒன்றாக இருக்கும்.

இந்தத் தரிசனங்கள் ஒருபோதும் தவறாக இருந்ததேயில்லை. நான் இதுவரை உணர்ந்திராத மிகவும் பயங்கரமான உணர்ச்சியாக அது இருந்தது... நான் ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது பிசாசின் அலறலைப் போல் இருந்தது. நான் பார்த்தபோது ஸ்திரீகள் வந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் பச்சை வர்ணம் தீட்டியிருந்தனர். அவர்களுடைய முகங்களைப் பார்த்தேன். அவர்களுடைய கண்களின் கீழ் பச்சை வர்ணம் தீட்டியிருந்தது. இன்றைய பெண்கள் வர்ணம் தீட்டிக்கொள்வது போல், அவர்களுடைய கண்கள் பின்னால் வரைக்கும் தீட்டப்பட்டிருந்தது - அவர்களுடைய கண்களும் முகமும். அவர்கள் ''ஊ, ஊ, ஊ, ஊ'' என்று அலறிக் கொண்டு சென்றனர். ஓ, என்னே! நான், "ஓ, தேவனே, என்மேல் இரக்கமாயிரும். ஓ, தேவனே இரக்கமாயிரும். நீர் எங்கேயிருக்கிறீர்? நான் மாத்திரம் திரும்பிச் சென்று வாழ்க்கை நடத்த நீர் அனுமதித்தால், நான் நல்ல பையனாக இருப்பேன் என்று உமக்கு வாக்களிக்கிறேன்'' என்று கதறினேன். அது ஒன்று மாத்திரமே என்னால் கூற முடிந்தது. தேவன் அறிவார், நியாயத்தீர்ப்பின் நாளில் நான் சொன்ன இந்த வாக்குமூலத்தின் பேரில் அவர் என்னை நியாயந்தீர்ப்பார்.

இதைத்தான் நான் சொன்னேன்: ''தேவனாகிய கர்த்தாவே, நான் திரும்பிப் போகட்டும். நான் நல்ல பையனாக இருப்பேன் என்று உமக்கு வாக்களிக்கிறேன்.''

48. நான் சுடப்பட்ட போது, பொய் சொல்லியிருக்கிறேன். நான் செய்யக்கூடிய எல்லாவற்றையுமே செய்திருக்கிறேன். ஆனால் ஒன்றை மாத்திரம் கூற விரும்புகிறேன்... இங்குள்ளபோதே எல்லாவற்றையும் சரிபடுத்திக் கொள்வது நலம். நான் கீழ்நோக்கி பார்த்த போது, நான் ஏறக்குறைய இரண்டு பாகங்களாக பிளக்கப்பட்டது போல் கண்டேன்... நான், ''தேவனே, என்மேல் கிருபையாயிரும். நான் விபச்சாரம் செய்ததில்லையென்று உமக்குத் தெரியும்'' என்றேன். அது ஒன்று மாத்திரமே என்னால் தேவனிடம் கூறமுடிந்தது. அவருடைய மன்னிப்பு போன்ற ஒன்றையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ''நான் விபச்சாரம்

செய்ததில்லை'' என்று மாத்திரமே கூறமுடிந்தது.

அவர்கள் என்னை வெளியே கொண்டு வந்தார்கள். அப்பொழுது, "தேவனே, என்மேல் கிருபையாயிரும். நான் திரும்பிப் போகச் செய்வீரானால், ஒரு நல்ல பையனாக இருப்பேன்" என்று அழுதேன். தேவன் எங்கோ இருக்கிறார் என்று அறிந்திருந்தேன். எனவே, தேவன் உதவி செய்வாராக. என்னைச் சுற்றிலும் களைப்புற்றவர்கள் இருக்க நான் புதிதாக அங்கு சென்றேன். மிகவும் கொடூரமான, பயங்கரமான, தேவனற்ற உணர்ச்சி... மிகப் பெரிய கண்கள் போல்தோற்றமளித்தன... பெரிய கண் இமைகள், பூனைக்கு இருப்பது போல், பின்னால் இப்படி வரையப்பட்டிருந்தது. பச்சை வர்ணம் இப்படி தீட்டிக்கொண்டு, பூச்சி அரித்தது போன்ற முகங்களையுடையவர்களாய் "ஊ, ஊ, ஊ'' என்று அவர்கள் அலறிக்கொண்டு சென்றனர்.

ஓ, என்னே ஒரு பயங்கர உணர்ச்சி!அப்பொழுது நான்...

49. சிறிது நேரத்திற்குள்ளாக இயற்கை வாழ்க்கைக்கு நான் திரும்பி வந்துவிட்டேன், அந்த காரியம் என்னை தொல்லைப்படுத்தியது. நான், ''அது போன்ற இடத்திற்குப் போகவே கூடாது'' எந்த ஒரு மானிடனும் அதைப் போன்ற ஒரு இடத்திற்கு போகவே கூடாது என்று நினைத்துக் கொண்டேன். ஏழு மாதங்கள் கழித்து, நான் மேற்கே நின்று, அந்த பொன் நிறமுள்ள சிலுவை என்மேல் வரும் தரிசனத்தைக் கண்டேன். ஆக்கினைக்குட்படுத்தப் பட்டவர்களின் ஸ்தலம் எங்கோ ஓரிடத்தில் உள்ளது என்பதை நான்அறிந்து கொண்டேன்.

**63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்**

-------------

23. மேலும், அனேக ஆண்டுகளுக்கு முன்பு நான் இழக்கப்பட்டவர்களின் பிரதேசங்களையும் கண்டேன். அங்கேயிருந்தேன். நண்பனே, நான் உனக்குக் கூறுகிறேன், ஒரு முதிர் வயதுள்ள மனிதனாக நான் உன்னை இதை நம்பச் செய்யட்டும். தேசம் முழுவதும் இந்தக் காலை வேளையில் செய்தியைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களே, அந்த இடத்தைப் பார்க்க விரும்பவே விரும்பாதீர்கள். நான் அதை விவரிக்கத்தக்கதான வழியேயில்லை. நான் ஒரு ஓவியனாயிருப்பேனானால், ஒரு தூரிகை (Brush) யைக் கொண்டு என்னால் அதைப் படமாக வரைய இயலாது. ஒரு தேவ ஊழியக்காரனாக என்னால் அதை உங்களுக்கு விவரித்துக் கூறமுடியாது. நரகம் ஒரு எரிகிற ஸ்தலம் என்று பேசுகிறோமே, அங்குள்ள பயங்கரங்களை நினைக்கும்போது அது இன்னும் பத்து லட்சம் மடங்கு மோசமாயுள்ளது.

24. ஆனால் மோட்சம்... அல்லது இந்த இடம் எங்கானாலும் சரி, அதை என்னவென்று அழைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. "பலிபீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்கள்" என்று அந்த இடத்தைக் குறித்துக் குறிப்பிட்டார். அப்போது, நான் ஒரு போதும்... அது எவ்வளவு மகிமையான காரியம் என்று விவரித்துச் சொல்ல வழியே இல்லை, அங்கே... இப்பொழுது, நீங்கள் என் வார்த்தையை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும், நான் ஒரு மனிதன் மட்டுமே, பாருங்கள்? ஆனால் இந்தத் தரிசனங்கள் நான் கூறிய பிரகாரமே எப்பொழுதும் நிறைவேறி வந்திருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் மெய்யாகவே இருந்திருக்கின்றன. அதுவும் கூட (அந்த தேசத்தைக் கண்டது. 21ம் பத்தி - - தமிழாக்கியோன்) மெய்யாகவே உள்ளது. நீங்கள் எதைச் செய்தாலும், நீங்கள் மற்ற எல்லாவற்றையும் தவறவிட்டாலும் (சுகம்,

பலம், உங்கள் கண் பார்வை எதுவாயிருந்தாலும் சரி), அதை தவறவிட்டு விடாதீர்கள். அதோடு ஒப்பிடப்படக்கூடியது ஒன்றும் இல்லை . எனக்குத் தெரிந்து, அதை விவரிக்கத்தக்கதான வார்த்தை ஆங்கில மொழியில் இல்லை. அது "பூரணமானது” எனக் கூறுவீர்களானால், அது அதையும் கடந்திருந்தது; "மிக நேர்த்தியானது” என்பீர்களானால் அது அதையும் கடந்திருந்தது. "உயர்ந்தது” எனக் கூறுவீர்களானால்,.... எனக்குத் தெரிந்தபடி அதை விவரிக்கத் தக்கதான வார்த்தை இல்லை, ஏனென்றால் அது அவ்வளவு...

**65-11-28M தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தானம்**

------------

114. கடைசி நாட்களில் கள்ள அபிஷேகம் பெற்றவர்கள் இருப் பார்கள், கள்ள இயேசுக்கள் அல்ல. கள்ள

இயேசுக்களை அவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்; கள்ள அபிஷேகம் பெற்ற வர்களை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் அபிஷேகம் பெற்றவர்களே. ஆம், ஐயா! ஆனால் அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமானவர்கள். கிறிஸ்து செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்ய அவர்கள் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள், ஆனால் அவருடைய வார்த்தையுடன் இணைந்து போகாதவர்கள். பாருங்கள்?

''அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? என்பார்கள்.''

அவர், "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச்

செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள்'' என்பார்.

"நான் பெந்தெகொஸ்தேயினனாக இருந்தேன். தேவனுக்கு மகிமை! நான் கூச்சலிட்டேன்; அந்நிய பாஷைகள் பேசினேன்; வியாதியஸ்தர் மேல் கைகளை வைத்து சுகப்படுத்தினேன்; பிசாசுகளைத் துரத்தினேன்.''

''அக்கிரமச் செய்கைக்காரனே, என்னை விட்டு அகன்று போ, நான் ஒருக்காலும் உன்னை அறியவில்லை.''

115. நான் என்ன கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? ஓ, சிறுபிள்ளைகளே, இன்றிரவு அந்த விட்டமினின் தேவையை உணருகிறீர்களா, அந்த ஒன்றை .....? மேலே ஒரு சரீரம் காத்திருக்கிறது, ஒரு சரீரம், பெற்றுக் கொள்வதற்காக அங்கு காத்திருகிறது. ஜனங்களே, வஞ்சிக்கப்படாதீர்கள்! வஞ்சிக்கப் படாதீர்கள்! பிசாசு

வஞ்சிக்கிறவன். நீங்கள் கலியாண வஸ்திரத்தை கண்டிப்பாக தரிக்க வேண்டும்.

116. நாம் இப்பொழுது சாயங்கால நேரத்தில் இருக்கிறோம். மண்ணான இந்த சரீரம் அழிந்து போகக் காத்திருக்கிறது, நாம் வானத்துக்குரிய சரீரத்தில் பிரவேசிக்க ஆயத்தப்பட்டுக் கொண்டி ருக்கிறோம். நாம் மகத்தான ஏதேனுக்குள் பிரவேசிக்க தேவனு டைய வினோதமான அழைப்பை இப்பொழுது உணருகிறோம். நாம் இவ்வுலகில் பிறப்பதற்கு முன்பு, நமது சிறு சரீரங்கள் எதோ ஒன்றுக்காக அழுதது. அது கொடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் நாம் ஊனமுள்ள பிள்ளைகளாய் பிறந்திருப்போம். தேவன் அங்கு எந்தவிதமான ஊனத்தையும் வைத்திருக்கவில்லை. எல்லாமே பிழையின்றி அமைந்திருக்கும். மணவாட்டி மணவாளனைப் போன்று தன் காலத்தில் வெளிப்பட்ட வார்த்தையா

யிருக்கிறாள். பிள்ளைகளே, இன்றிரவு உங்கள் ஒவ்வொருவருக்கும் தேவன் அருளுவாராக. நாம் செல்வதற்கு பரலோகம் ஒன்றுண்டு. செல்லாமல் நம்மைக் காத்துக்கொள்ள, நரகம் ஒன்றுண்டு.

## 65-12-05 இனி வரப்போகும் காரியங்கள்

--------------

181. கடந்த இரவு ஊழியக்காரர்களிடம் பேசிக் கொண்டிருந்தது போன்றே, நான், "ஆம், நீங்கள் இங்கே பள்ளிக்குப் போகிறீர்கள், நீங்கள் உங்களுடைய வேத சாஸ்திரத்தை கற்றுக் கொள்கிறீர்கள், அங்கிருந்து வெளியே சென்று வாசிக்கவும், எழுதவும் மற்றும் கணிதத்தையும் கற்று, ஆப்பிரிக்காவுக்குச் சென்று, அந்த சுதேசிக்கு முதல் முறை நீங்கள் செய்ததைக் காட்டிலும் இரட்டத்தனையாய் நரகத்தின் மகனாய் ஆக்குகிறீர்கள்" என்றேன்.

182. ஆனால் நான், "இயேசுவானவர், அவருடைய சீஷர்கள் சென்று, ஊழியர்களாய் இருக்க கட்டளை கொடுத்த போதோ, '' அவர், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ முதலாவதாக எருசலேம் நகரத்தில் இருங்கள்.' ஏதோ ஒரு குருமார் பள்ளியல்ல, ஏதோ ஒரு நீதி போதனையின் பள்ளியல்ல'' என்றார். அவர் 'நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேமில் நகரத்தில் இருங்கள். பரிசுத்த ஆவி உங்கள் மேல் வந்த பின்னர், எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும் உலகத்தின் கடைசி

பரியந்தமும் நீங்கள் எனக்கு ஊழியர் களாகவோ அல்லது சாட்சிகளாகவோ இருப்பீர்கள் என்றாரே'' என்று கூறினேன்.

183. ஒரு மனிதன் கல்வியினாலல்ல, வேத சாஸ்திரத்தினாலல்ல, சபை அங்கத்தினனானதினால் அல்ல, பரிசுத்த ஆவியினால் தரிப்பிக்கப்படும் வரைக்குமே! ஆமென். (ஒலிநாடாவில் காலி இடம் - ஆசி.) ....... எருசலேமிற்குச் சென்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்படும் வரைக்கும் அவன் பிரசங்க பீடத்திற்கோ, ஒரு ஊழியனாகவோ அல்லது மற்ற ஏதோ ஒன்றாக இருக்க தகுதியற்ற வனாயிருக்கிறான். அது உண்மையே.

**53-04-05S போய் என் சீஷர்களுக்குச் சொல்லுங்கள்**

\- - - - - - - - - - - - -